V 5 N10.1) 28 8/8 1932

C

3L
ഖ211, N28K1
N132.517
188965

KALANILAYAM

தனிப்பிரதி விலை, அணா மூன்று

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ஹ ஏப்ரல் மீ 28உ [No. 17

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 321
2. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 323
3. ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் (சப்பாணிப்பருவம்) கி. வெங்கடசாமி ரெட்டியார் 324
4. அப்பர் (64 கலை—தர்க்கம்—சப்தப்ரமாணம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 326
5. மணமும் மணமின்மையும்.
M. சோமசுந்தரம் பிள்ளை B.A., L.T. 227
6. நம்மாழ்வார் வைபவம் (2-ம் பத்து 8ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 328
7. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - சுயம்வரகாண்டம் 329
8. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 3. களம் 1.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 333
9. கம்பராமாயணம் (சூர்ப்பணகைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 335
10. வர்த்தமானம் 339

கலாநிலயம்

18896

வித்தகமோ விதிவசமோ. 9.

விதியொன்று வேறுபடக் கிடக்குமாயின் வித்தகத்தால் பெற்ற பயன் யாதென்றுரைக்கலாம் என்பதை மேடர்லிங்க் உதவிகொண்டு சென்றநாள் சிறிதிங்கு ஆராய்ந்தோம். தான் சாதித்தது இது இதுவென்று வகுத்துக் காட்டுதற்கோ வித்தகனெவனும் வல்லவனாகாதிருக்கலாம். உயிர் உடல் பொருளாதியவைகளுக்கு வந்துசேரும் அநர்த்தங்களைக் காக்கும் வகையறியாது அழிந்துபோகின்ற கதி வித்தகர்களுக்கும் நேர்கின்றது. மற்றவர்களை இக்கதியினின்று காப்பதும் வித்தகன் கையிலில்லை. இத்தனையும் இயம்பிய பின்னும், வித்தகத்தின் விளைவு வீணாய தில்லை என்பதை மேடர்லிங்க் உரைகளினின்று நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். முதலில், 'நாசம் வந்துற்றபோதும் நல்லதோர் மனதைப் பெற்றேன்' என்று உவக்கும் பாக்கியம் வித்தகற்கே உரியது. உடல் பொருள் உயிர்கள் அந்தத்தில் எவ்வாற்றாலேனும் அழிந்தொழியுந் தன்மையனவே யாதலின் அந்தத் துன்பங்கள் மனத்திட்ப முடையவர்களால் தாங்குதற் கியன்றன. மற்று வித்தகநன்னிலை வாய்த்திடாச் சிற்றின்மாக்கள் அழிவுசெய்துகொள்வன இவ் வுயிரும் உடலும் பொருளும் மாத்திரம் அல்லவே. அவர்தம் ஆன்மாக்களுங்கூடப் படுநாச மடைகின்றன. இவ்வண்ணம் ஆன்மநாசம் அடைகின்றதே என்னும் வேதனையே யாதினும் மிகக்கொடியது. நம்முடைய ஆன்மா அழிவடைந்துவருவதைக் கண்டிருந்தும் அதனைக் காக்கலாற்றாக் கையறுநிலையில் கலங்கித்துடிக்கின்ற துயரம் வித்தகர்களைச் சார்ந்திடாது. பசிப்பிணி பொல்லாததே; ஆயினும், உணவின்றி உணங்கிச்சாவான் கதியினும், தன் கையையே மென்றுதின்று அப்பசியைத் தணிக்க முயல்பவன் கதிதான் எண்ணரிய கொடுமை மிக உடையதென்பதைக் கழறல் வேண்டுமோ! வித்தகர்க்கும் மற்றவர்க்கும் இடுக்கண்கள் முடுகிவரலாம். ஆயினும், வித்தகமுடையார்மாட்டு, அவ்விடுக்கண் செய்கின்ற அழிவிற்குமேல் யாதொன்றுஞ் சேர்தலரிது; அதுவும், வள்ளுவர் வகுத்தவண்ணம், "வெள்ளத்தனைய விடும்பை யறிவுடையான் உள்ளத்தில் உள்ளக்கெடும்." அறிவிலியோ, தன்னுடைய ஆன்மாவையுங் கொண்டுபோய் அவ்விடுக்கண்ணிற் கிரையாக்கி மூலநாசம்பெற அனைத்தையும் முடிக்கின்ற கொடுமையில் மூழ்கி யொழிகின்றான்.

ஆதலின், தன்னையேனும் பிறரையேனும் காப்பதென்னுங்கருத்து உடல் பொருள் உயிர்களைக் காக்கின்ற கொள்கையில் அடங்கிவிடுகின்றதில்லை. இவையனைத்தும் மனிதர்தம் புறவாழ்க்கைக்கே யுரிய சின்னஞ்சிறு செய்திகள். நம்மில் ஒவ்வொருவருக்கும் இருவகை வாழ்க்கைகள் இருக்கின்றன. ஊனுறக்கமாதியவைகளுக்குடன்பட்டுக் காலதேச வர்த்தமானங்களுக்கிணங்கி நடக்கும் வாழ்க்கை ஒன்று. இது புறவாழ்க்கை; அதன் குறைவும் நிறைவும் வெளிப்படையாய்த் தோன்றிநிற்கும். மரணமும் மற்றுள கேடுகளும் இந்தப் புறவாழ்க்கைக்கே உரியன. மேடர்லிங்க் நுண்ணிதின் எடுத்துரைத்திருக்கின்றபடி, "ஒருவனைக் காப்பதென்பதன் கருத்து, மரணத்தினின்றும் மற்றுள கேடுகளினின்றும் காப்பது மட்டுமே என்று கொள்ளலாகாது. ஆன்ம அழிவு நேராமற் காப்பதுவே நிரந்தரமான காவல்". ஆன்மசூன்ய மாக்கிய

பின் அடுத்துச் செய்வதற் கேதுளது? புறவாழ்க்கையைப் பற்றுவதெல்லாம் அம்பி துணையாக ஆறுகடக்கப் புகுவதையே யொக்கும்.

இனி, மனிதற்குரிய மற்றொரு வாழ்க்கை, உள்வாழ்க்கை. அறிவுடையான் தன் உள்ளத்தில் உள்ள வேண்டுமென்று திருவள்ளுவர் இவ்வாழ்க்கையையே தம் மனத்துள் வைத்துப் பேசினார். உள்வாழ்க்கையை நினைவுறுத்துவதனினும் நிலைத்தபே ருதவியுங் காவலும் மனிதருக்கு உண்மையாகச் செய்யவல்லது வேறொன்றுமில்லை. ஒருவனை முன்னேறச் செய்வதென்பதன் உண்மைக் கருத்தும் இவ் வுள்வாழ்க்கையினோடு நல்லுறவு எய்துவிப்பதே.

உள்வாழ்க்கை - வெளிவாழ்க்கை; இவ்விரண்டையும் எவ்வண்ணம் வகைசெய்து உணர்ந்துகொள்வது? புறத்துஉளவற்றைத் தன்னுள்ளே யிழுத்துக்கொண்டு துய்க்கவேண்டுமென்னுஞ் சிந்தனையால் விவகரிப்பதெல்லாம் வெளிவாழ்க்கைக்குரிய செய்திகளென்றும், எல்லோரும் தமராக அவருக்குத் தன்னையே நலமுற நல்குவது எங்ஙனம்எங்ஙனம் என அவாவிப் பெருகும் நிலைதான் உள்வாழ்க்கைக்குரிய உண்மையென்றும் ஒருவண்ணம் உரைசெய்யலாம். பாலிற்குப் பசு வளர்க்குமொருவன் புறவாழ்க்கை புரிகின்றான். தன்னையே தீம்பாலாக உருக்கித் தன் மகவிற் கருத்தும் அன்னையொருத்தி உள்வாழ்க்கைக்குரிய இலக்கணத்தை உணர்த்துகின்றாள். எனினும் உள்வாழ்க்கையைப் பற்றி உணரவேண்டியதனைத்தும் இதனோடு முடிந்துவிடவில்லை. இனி மாரிஸ் மேடர்லிங்கே பேசட்டும்:—

The inner life, perhaps, is not what we deem it to be. There are as many kinds of inner lives as there are of external lives. Into these tranquil regions the smallest may enter as readily as he who is greatest, for the gate that leads thither is not always the gate of the intellect. It often may happen that the man of vast knowledge shall knock at this gate in vain, reply being made from within by the man who knows nothing. The inner life that is surest, most lasting, possessed of the uttermost beauty, must needs be the one that consciousness slowly erects in itself, with the aid of all that is purest in the soul. And he is wise who has learned that this life should be nourished on every event of the day: he to whom deceit or betrayal serves but to enhance his wisdom: he in whom evil itself becomes fuel far the flame of love. He is wise who at last sees in suffering only the light that it sheds on his soul; and whose eyes never rest on the shadow it casts upon those who have sent it towards him. And wiser still is the man to whom sorrow and joy not only bring increase of consciousness, but also the knowledge that something exists superior to consciousness even. To have reached this point is to reach the summit of inward life, whence at last we look down on the flames whose light has helped our ascent. But not many can climb so high; and happiness may be achieved in the ardent valley below, where the flames spring darkly to life. And there are existences still more obscure which yet have their places of refuge. There are some that instinctively fashion inward lives for themselves. There are some that, bereft of initiative or of intelligence, never discover the path that leads into themselves, and are never aware of all that their refuge contains: and yet will their actions be wholly the same as the actions of those whose intellect weighs every treasure. There are some who desire only good, though they know not wherefore they desire it, and have no suspicion that goodness is the one fixed star of loftiest consciousness. The inner life begins when the soul becomes good, and not when the intellect ripens. It is somewhat strange that this inner life can never be formed out of evil. No inner life is for him whose soul is bereft of all nobleness. He may have full knowledge of self; he may know, it may be, wherefore he shuns goodness; and yet shall he seek in vain for the refuge, the strength, the treasure of invisible gladness, that form the possessions of him who can fearlessly enter his heart. For the inward life is built up of a certain rejoicing of soul; and the soul can never be happy if it possess not, and love not, something that is pure. It my perhaps err in its choice, but then even will it be happier than the soul to which it has never been given to choose.

And thus are we truly saving a man if we bring it about that he loves evil somewhat less then he loved it before; for we are helping that man to construct, deep down in his soul, the refuge whereagainst destiny shall brandish her weapons in vain. This refuge is the monument of consciousness, or, it may be, of love; for love is nothing but consciousness, still vaguely in search of itself; and veritable conscousness is nothing but love that at last has emerged from the shadow. And it is in the deepest recess of this refuge that the soul shall kindle the wondrous fire of her joy. And this joy of the soul is like unto no other joy; and even as material fire will chase away deadly disease from the earth, so will the joy of the soul scatter sorrow that malevolent destiny brings. It arises not from exterior happiness; it arises not from satisfied self-love; for the joy that self-love procures becomes nobler, but the joy of pure love increases as nobility comes to the soul. Nor is this joy born of pride; for to be able to smile at its beauty is not enough to bring joy to the soul. The soul that has sought in itself has the right to know of its beauty too much, to become over-conscious thereof, were perhaps to detract somewhat from the uncousciousness of its love. The joy that I speak of takes not from love what it adds unto consciousness; for in this joy, and in this joy alone, do consciousness and love become one, feeding each on the other, each gaining from that which it gives. The striving intellect may well know happiness beyond the reach of the satisfied body; but the soul that grows nobler has joys that are often denied to the striving intellect. These two will often unite and labour togethar at building the house within. But still it will happen at times that both work apart, and widely different then are the structures each will erect. And were this to be so, and the being I loved best of all in the world came and asked me which he should choose—which refuge I held to be most unattackable, sweetest, profoundest—I would surely advise him to shelter his destiny in the refuge of the soul that grows nobler.

அறிவிற்கும், ஆன்மாவிற்குரிய உள்வாழ்க்கைக்கும் இடைகிடந்த வேற்றுமையை இனிது விளக்கும் இவ் வாக்கியங்கள் சனங்களின் செவிகளை எட்ட எட்ட, ஒருபிடி மண்ணில் உழல்கின்ற புழுவாழ்க்கை விட்டெழுந்து இவ்வுலகு[illegible] மெய்யே.

குன்றுடையானும் மக்களும்

இரண்டாம் புத்தகம் — அண்ணன்மார் வரலாறு

[304-வது பக்கத் தொடர்ச்சி]

அவர்களுடைய வேடத்தையும்முகப்பொலிவையுங் கண்டு தாமரை மதிமயங்கி, 'பங்காளிகள் வந்து வீட்டைக் கொள்ளையிட்டுத் தலைவரைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அந்தப் பழிகாரப் பாவிகள் அவர்க்கு என்ன தீங்கு செய்தார்களோ அறியேன். நீங்கள் உடனே சென்று அவருக்கு யாதொரு தீங்கும் நேரிடாமல் காப்பாற்றுவீர்களா?' என்றாள். கண்ணீர் வடிய அவள் சொன்னது செவியிற் பட்டவுடன் சிறுபுலி சின்னண்ணன் வாளையுருவி, 'இதோ, அந்தப் பங்காளிகளுடைய தலைகளை உருட்டுகின்றேன்' என்று சொல்லிச் சினந்து முன்சுழற்றும் பின்சுழற்றும் சுழற்றிச் சாடினான். பெரியண்ணன் தம்பியின் கைபிடித்து, 'நாம் பாய்ச்சலூருக்குப் போவோம், வா' என்று சொல்லி அவனை அழைத்துக்கொண்டு தெருவாசலுக்கு வந்தான்.

இதற்குள், சாம்பான் இரண்டு குதிரைகளையும் பிடித்துவந்து குதிரைக் கொட்டிலில் நுழைந்து, கடிவாளமும் கல்லணையும் எடுத்துப் பூட்டிச் சகலாத்து விரித்துத் தெருவாசலுக்குக் கொண்டுவந்து அண்ணன்மாரை வணங்கிநின்றான்.

பெரியண்ணன் அவனை நோக்கி, 'சாம்பா, நாங்கள் குதிரைமீது முன்னே போகின்றோம். நீ பின்னிடாமல் தொடர்ந்து வா. உன் திறமையைப் பார்ப்போம்' என்று சொல்லி வாய்மூடுமுன் அண்ணனும் தம்பியும் பொற்குறடாக்களைக் கையிற்பற்றித் தாம் இருந்தவிடத்திருந்தே குதித்துக் குதிரைகளின்மேல் அமர்ந்தனர். குதிரைகள் பாய்ந்தன.

உடனே குதிரைகள்மின்னலைப்போல் மின்னிஓடின. குளம்புகள் பட்டவிடத்தில் செந்தூளும்கருந்தூளும் எழும்பின. ஓடின வேகத்தால் இருமருங்கிலும் இருந்த ஆட்களும் மாங்களும் புலப்படவில்லை. காடுகளும் தோப்புக்களும் தூரவுகளும் ஒருநொடியிற் பின்னிட்டன. குதிரைகளின் கால்கள் பட்டவிடத்தில் கற்கள் கடுகுபொடியாயின. முன்காலிற் பட்ட கல் முப்பது முழம் பறந்துபோய் வீழ்ந்தது. குன்றுகளின்மீதும் மலைச்சாரலிலும் குதிரைகள் அம்புபோற் பறந்தன. மலையில் சிலை யெழும்பிற்று. கண்டோர் தம் கண்களை மூடிக்கொண்டனர். வழியிடையில் 'சாம்பா' என்றான் பெரியண்ணன். 'சாமீ, இதோ, கூடவே வருகின்றேன்' என்றான் சாம்பான்.

பாய்ச்சலூரை அணுகுதலும் அண்ணன்மார் குதிரைகளினின்றும் இறங்கிச் சாம்பான் குதிரைகளை நடத்திக்கொண்டு வர, ஊர்மந்தையை யடைந்து, பக்கத்திலிருந்த பள்ளிக்கூடத்தைக்கண்டு அங்குச் சென்றனர். பள்ளிக்கூடத்தில் ஒருவரும் இல்லை. பிள்ளைகளைச் சாப்பாட்டுக்கு விடுத்து வாத்தியாரும் வீட்டுக்குப் போயிருந்தார். குதிரைகளை வாசலிலிருந்த ஒரு தூணிற் கட்டிவிட்டுச் சாம்பான் பண்ணடிகளுடைய உத்தரவிற்குக் காத்திருந்தான். அண்ணன்மார், பாடசாலையில் இருந்த இரண்டு நாற்காலிகளில் அமர்ந்தனர்.

சிறிதுநேரங் கழிந்தபின், வீட்டுக்குப் போயிருந்த வாத்தியார் நீராடி, உண்டிமுடித்து, நெற்றியிலே பட்டைபட்டையாய்த் திருநீறு விளங்க, கையிலே வெற்றிலைபாக்குப் பிடித்துத் தாம்பூலம் மென்றுகொண்டு மேல்வேட்டி மார்பிற்புரண்டு காற்றிலாட உல்லாசமாய் அவ்விடம் நடந்துவந்தார். வந்தவர் பள்ளிக்கூட வாசலில நின்ற குதிரைகளையும் சாம்பானையும் நாற்காலிகளில் வீற்றிருந்த சேவகர்களையும் கண்டு மெய்ம்மறந்து,வியர்த்து உளறி மென்றுமென்று விழித்தார். சின்னண்ணன் அவரை நோக்கி, 'யார் நீ?' என்று இடியிடித்தாற்போல் கேட்டான். வாத்தியார் சிறுநீர் பெருக்கி, 'நா—அ—அ—அ—ன் வாத்தி...' என்றான். பெரியண்ணன் எழுந்து அவரை யணுகி, 'பயப்படாதே. நீ ஒரு குற்றமும் செய்யவில்லை. உன்னை நாங்கள் ஒன்றும் பண்ணமாட்டோம். உன்னிடம் படிக்கும் பிள்ளைகளை உடனே இங்கு அழைத்துவா' என்றான்.

விட்டதுபோதும் என்று வாத்தியார் திரும்பிப் போய்ப் பங்காளிகளின் சிறுவர்களை யழைத்துப் பள்ளிக்குப் போகும்படி சொல்லியனுப்பிவிட்டுத் தாம் ஒளிந்துகொண்டார். அச்சிறுவர்கள் ஒவ்வொருவராய் வந்தார்கள். அவர்களில் மூத்தவனாகிய ஒருவன், தான் பண்ணடிமகன் என்பதையும் மறந்து அண்ணன்மார் நாற்காலியில் உட்கார்ந்திருத்தலைக்கண்டு பொறுமல், சின்னண்ணனைப் பார்த்து 'யாரடா, நீ?' என்றான். சின்னண்ணன் சினந்து கையிலிருந்த பொற்குறடாவால் அப்பையன் முதுகில் நாலடி யடித்தான். பையன் கூக்குரலிட்டு அழுதான். இதற்குள் பங்காளிகளின் மக்களான மற்றைச்சிறுவர்களும் வந்து கூடி, தங்கள் சகோதரனுக்கு ஆதரவுசொல்லி அண்ணன்மாரை ஏளனஞ் செய்தார்கள். சின்னண்ணன் அவர்கள் எல்லோரையும் திரட்டிக் குறடாவால் பளீர் பளீர் என வீசினான். பையன்கள் அண்ணன்மார் மீது கற்களை வீசி எறிந்து அழுதுகொண்டு வீட்டுக்குப்போய்த் தங்கள் தந்தையரிடம் முறையிட்டார்கள். பங்காளிகள் கோபித்துப் பத்துஆட்களைக்கூவி, அண்ணன்மாரைக் கையோடு பிடித்துவரும்படி பணித்தார்கள்.

ஆட்கள் வருதலைக்கண்டு பெரியண்ணன் தம்பியை நோக்கி, 'ஆட்கள் வருகிறார்கள். அவர்களை வருத்தாதே. அவர்களோடு நாம் பங்காளிகள் வீட்டுக்குப்போய் நமது தந்தையாரை விடுதலை செய்யவேண்டும்' என்று சொல்லக்கேட்டுச் சின்னண்ணனும் இசைந்தான்.

ஆட்கள் வந்து அண்ணன்மாரைப் பிடித்துக் கைகளைக்கட்டி அழைத்துக்கொண்டு போனார்கள். சாம்பானும் உடன் சென்றான்.

அண்ணன்மார் வருகையில் பங்காளிகள் குன்றுடையானைத் தங்கள் வீட்டுவாசலில் கயிற்றால் இறுகக் கட்டி, 'உன் சொத்து முழுவதையும் எங்களுக்கு எழுதிவைக்கிறாயா, இல்லையா? இல்லையென்றால் பார்' என்று சொல்லிக் குறடாவாலே இரத்தம் பீறிடும்படி அடித்து, அவன் தலையில் ஒருபெரும் கல்லை[illegible]

வைத்து, வெய்யிலில் நிறுத்தி, அவன் பட்டபாட்டைக்கண்டு கைகொட்டி நகைத்தார்கள். சின்னண்ணன் தந்தையைக் கண்டவளவில் தன் கைக்கட்டை உடைத்தெறிந்து வாளையுருவி ஒரே பாய்ச்சலில் தந்தையை யணுகி, அங்கே சூழ்ந்து நின்ற பங்காளிகளின்மேற் சாடினான், சாம்பான் அங்குக் கிடந்த ஒரு பழந்தூணைக் கையிற்பற்றி ஆட்களை வெருட்டினான். பெரியண்ணன் தன் கைக்கட்டை அறுத்தெறிந்து தந்தையை யணுகி, அவனைக் கட்டியிருந்த கயிற்றை வாளால் அறுத்துத் தந்தையை விடுதலைசெய்து தம்பிக்குப் பக்கத்துணையாய் நின்று பங்காளிகளை எதிர்த்தான்.

அண்ணன்மாரும் சாம்பானும் பங்காளிகளோடும் அவர்களுடைய ஆட்களோடும் பொருகையில், விடுதலையடைந்த குன்றுடையான் அதுவே சமயமென்று மெதுவாய் நழுவிச் சிற்றூலைப்பட்டணத்தை நோக்கி, வியர்க்கவும் பெருமூச்செறியவும்விரைந்துஓடி,தெருக்கதவைத்திறந்து தன் அரண்மனையினுட்புகுந்து, 'அடி தாமரை! அடி தாமரை! பிழைத்தேன், பிழைத்தேன்; என்று கூவிக்கொண்டு எதிர்கொள்ளவந்த மனைவியின் கரங்களிலே வீழ்ந்தான்; அழுதான்; மனைவி தேற்றத்தேறி, பங்காளிகள் தனக்குச் செய்த தீங்கை விவரித்துச் சொல்லிப் பின்பு, 'தாமரை, என்னை விடுவித்த அவ்விரு சேவகர்களும் யாரடி? என்றான். மனைவி,'அவர்கள் நம் மக்களே, பங்காளிகள் கொன்றுவிடுவார்களென்று அவர்கள் பிறந்தவுடனே நமது குலதெய்வமாகிய செல்லாண்டியம்மன் இந்தப் பத்து வருடங்களாக அவர்களை நிலவறையில் வளர்த்துவந்தாளாம். அந்த வரலாற்றைப் பின்னால் நம் மக்கள் வாயிலிருந்தே விரிவாகக் கேட்கலாம். கடவுள் நம் பங்கில் இருக்கிறார், வாருங்கள்'' என்று சொல்லி எழுந்து போய்ப் புண்பட்ட கணவனுடைய உடம்பிற்கு மருந்து பூசி அவனை யுபசரித்தாள்.

பங்காளிகளின்வீட்டுவாசலில் அண்ணன்மாருஞ்சாம்பானும் பங்காளிகளையும் அவர்களுக்குத் துணைபுரியவந்த ஆட்களையும் அடித்தும் குத்தியுப்வீழ்த்தினார்கள். வீழுந்துகிடந்த பங்காளிகளைநோக்கி அண்ணன்மார், 'எங்கள் வீட்டில் கொள்ளையடித்துக் கொணர்ந்த சொத்துமுழுவதையும் இப்பொழுதே கொண்டுவந்து ஒப்புவியுங்கள்,ஒப்புவிக்காவிடில் உங்கள் வீடுவாசல்களையும், பெண்டிர் பிள்ளைகளையும் தீயிற்கு இரையாக்குவோம்'' என்று முழங்கினார்கள்: பங்காளிகளின் மனைவியர் கொள்ளைப்பொருள் அனைத்தையும் கொண்டு வந்து வைத்து, தம் கணவரை உயிரோடு விட்டுவிடும்படி அண்ணன்மாரைப் பலவாறு இரந்தனர். அண்ணன்மாரும் உடன்பட்டுக் கொள்ளைப்பொருளைத் தம் குதிரைகளின்மீது ஏற்றிக்கொண்டு புறப்படுகையில் சாம்பானை விளித்து, 'இவ்வூரில் மருத்துவச் சொக்கி என்பவள் ஒருத்தி உண்டு. அவளை மயிரைப்பற்றி இழுத்துக்கொண்டு ஊருக்கு வா' என்று கட்டளையிட்டுச் சிற்றூலைப்பட்டணத்தை நோக்கிச்சென்றனர்.

அண்ணன்மார் ஊர்சேர்ந்து தாம் கொண்டுவந்த கொள்ளைப்பொருளைத் தாய்தந்தையரின் அடிகளில் வைத்து வணங்குதலும் அவர்கள் பிள்ளைகளை வாரியெடுத்து உச்சிமோந்து ஆசீர்வதித்தார்கள். இதற்குள் அங்கே வந்த தங்கையும் அண்ணன்மாரைக் கண்டு ஓடிவந்து கோவென்றழுது அண்ணன்மார் தேற்றத் தேறினள்.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்வேளையில் சாம்பான் சொக்கியை இழுத்துவந்து அண்ணன்மார்முன்னிலையில் நிறுத்தினான். அண்ணன்மார் அவளை ஊருக்கப்பாலே ஒருகல் தூரத்திலே ஆழக் குழிதோண்டித் தாழப் புதைக்கும்படி உத்திரவிட்டனர்.

மறுநாள் குன்றுடையானும் தாமரையும் ஊரிலுள்ள பெரியோர்களை வரவழைத்து, நல்ல முகூர்த்தத்திலே பொன்னுரைத்துப் பாலூற்றிப் பெரியண்ணனுக்குப் பொன்னரென்று பெயரிட்டார்கள்; சங்குரைத்துப் பாலூற்றிச் சின்னண்ணனுக்குச் சங்கரென்று பெயரிட்டார்கள்; இவர்கள் சகோதரிக்குத் தங்கையென்று பெயரிட்டார்கள்.

சாம்பான் சுத்தவீரனாதல்பற்றி அவனுக்கு வீரசாம்பான் என்னும் பெயரும், பெரியண்ணன் குதிரை இளங் கருப்புநிறமா யிருந்தமையால் அதற்குக் கார்மேகம் என்னும் பெயரும், சின்னண்ணன் குதிரை கடைக்கண்ணிலும் காதிலும் உடலிலும் புள்ளிகளையுடைமையால் அதற்குப் புள்ளியென்றும் பெயரும் வழங்குவனவாயின. மற்றும் ஓராண்டு கழிந்தது.

ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்

[311-வது பக்கத் தொடர்ச்சி]

4 சப்பாணிப் பருவம்.

இடிக்கும்வெங் குரலொலிக் கண்டகூடஞ்சிதற
 இருசெவிமுறக் காற்றினுக்
கெட்டுக் குலாசலமு முட்கித் துகட்பட
 இணைச்சிறு விழித்தழலினுற்
பொடிக்குஞ் சுறுமறிந் தெழுகடலும் வற்றிமேற்
 புகையெழக் கடுநடைக்குப்
பொழிகதிர் மணிச்சுடிகை மிகுதலைப் பாந்தளும்
 புவனமுந் தனிநெளிப்ப
வெடிக்கும் பகட்டுவால் விசையிலே மாசலமும்
 வேர்பறிய வுயரநீட்டும்
வெற்றிப்புழைக்கை யையராவெனக் கதிர்மறைய
 வெஞ்சினக் கஞ்சனேவுந்
தடிக்குஞ்சினக் கரிவிழப்புடைக் குங்கையாற்
 சப்பாணி கொட்டியருளே
தவநீதி தவறாத நவநீத புராநாத
 சப்பாணி கொட்டியருளே. 1.

பாரேந்து பஃறலைப் பணிவேந்தின் மணிமுடி
 பதைத்துவாய் நஞ்சுகொட்டப்
பார்கவன் விழியொன்றி னீர்கொட்ட
 வொன்றிற் பசும்புலாற் குருதிகொட்டக்
கூரேந்து படைநிருபர் நெஞ்சுபறை கொட்ட
 குன்றிமுகம் வெயர்வுகொட்டக் [வொளி
குறுநகைக் கரடிக்கு மன்ன னுயிரம்வலங்
 கொண்டுசெய முரசுகொட்டச்
சீரேந்து வானவர் புயங்கொட்டி நறைகொட்டு
 செய்யமலர் மாரிகொட்டச்

செங்கமல மேலவன் விளங்குதாண் மலரினிற்
 றெய்வநதி நறவுகொட்டத்
தாரேந்து மாவலிகை நீரேந்து கைகளாற்
 சப்பாணி கொட்டியருளே
தவநீதி தவறாத நவநீத புராநாத
 சப்பாணி கொட்டியருளே. 2.

மனஞ்சல மிகுந்தமற மன்னருடல்
 மென்றசை மணங்கமழ வுண்டுமாங்கே
வழிபுலால் வெறிநீர் சுடச்சுடப்
 பருகியுயர் மதமிக்க சிறுகூளிகள்
கனஞ்செறி பிணக்கிரி யிவர்ந்துவீழ்ந்
 துதிரவெங் கலுழியாற்றிடை நீந்துவ
காலினெழு படமெனக் குடைகளைக்
 குடர்வலை கயிற்றினி னிசைத்துவிடுவ
சினஞ்செறி மதக்கரி மருப்பிணை
 யெடுத்துருள் சிரங்கள் பந்தெனவடிப்பத்
தேருருளை யச்சிலிட் டாடுபம்பர
 நிகர்திரிப்ப விவ்வாறு வெம்போர்த்
தனஞ்சயன் வயப்புரவி கோல்கொளுங்
 கைகளாற் சப்பாணி கொட்டியருளே
தவநீதி தவறாத நவநீத புராநாத
 சப்பாணி கொட்டியருளே. 3.

மழைக்குங் கருங்கூந்தல் கைசெய்ய
 மலர்வேய்ந்து வாணுதற் றிலதமெழுதி
மன்றலங் கமலமலர் குவளையஞ்
 செய்ததென மைத்தீட்டி முழுவயிரமிட்
டிழைக்கும் பொலன்றோடு வள்ளையிற்
 சேர்த்தியொ ரிழைக்குமிட மறநெருங்கி
யிளகி விம்மிப் புளகரும்பிப் பணைத்திறுகி
 யிணைமணிக் கவசமேயென்
றழைக்கும் பெயர்க்குரிய கொங்கையிற்
 களபமிட் டணிவரித் தொய்யிலெழுதி
யவிர்பிறைப் பிள்ளைபல வென்னநக
 ரேகைவைத் தம்போருகப் பெணின்பந்
தழைக்கும் படிக்குவளை யாடுமிரு
 கைகளாற் சப்பாணி கொட்டியருளே
தவநீதி தவறாத நவநீத புராநாத
 சப்பாணி கொட்டியருளே. 4.

விளிக்குங் கருங்குரலி னுருமேறு தீய்ந்துக
 வெறித்து விழியனல் கொளுந்த
மென்மயிர் சிலிர்ப்பமுன் கானிலங்
 குழிபட மிதித்துத்துகட் குவையெழத்
துளிக்குங் கமஞ்சூற் கருங்கொண்ட
 றன்னிறந் தோற்றக் கறுத்தபகடு
துரக்குங் கொடுங்கூற்று வருபொழுது
 நெஞ்சந் துணுக்கிட்டு மதிமயங்கி
யொளிக்கும் புலன்கடம் நிலைதளர்ந்
 தாருயிரு மூசலாடுறு மளவின்முன்
னூழ்வினை நலத்தினுன் தொல்பெயரி
 னென்றுவந் துதவவத் துயரநீங்கித்
தளிக்குந் தொழும்பருக் கஞ்சல்புரி
 கைகளாற் சப்பாணி கொட்டியருளே
தவநீதி தவறாத நவநீத புராநாத
 சப்பாணி கொட்டியருளே. 5.

வேறு

நாறு நடப்புகு வாளொ ருழத்தி
 தனத்தாசைக்காரன்
நாறு முடிச்சென வாரிச
 மொக்குளை நட்பாகிப் போட
ஏற விழித்தவளோர் களைகட்ட
 தெனக் காவிப் பூவை
ஈடில் வரைப்புய மீதெறிதற்
 கவனெய்த் தானைப் போல
மாறி வரப்பினில் வீழ
 வெடுக்கும் வரத்தாளைப் போல
மார்பி லணைத்தித மூறல்
 சுவைக்கும் வரத்தான் மிக்கோர்கள்
கூறு தமிழ்க்கிசை வேணு வனத்தவ
 கொட்டாய் சப்பாணி
கோகன கத்தவன் மோக மிகுத்தவ
 கொட்டாய் சப்பாணி.

வேத வரைக்குவ டேறி யிருக்கும்
 விளக்கே பொற்பூவின்
வேதன் மதிச்சடை யோன்முதல்
 வர்க்கொரு வித்தே தக்கோர்கள்
மூதறி விற்கொடு நாடி யிருக்கு
 முதற்சோ தித்தேவே
மூரன் முகத்திடை மாதர்
 முலைக்கணி முத்தே முற்றாத
வாத மயக்கினர் போத மதித்திடு
 மத்தே யெப்போது
மாயை தவிர்த்த நல்லோ ரிதயத்தில்
 வரக்கா மிப்போனே
கோதில் தவத்தவ வேணு வனத்தவ
 கொட்டாய் சப்பாணி
கோகன கத்தவள் மோக மிகுத்தவ
 கொட்டாய் சப்பாணி.

வேறு

தேசலை யுற்றனை போதியெ னச்சிறு மைக்காவி
 தேனிதழ் துய்த்திர வூடுசெ ருக்கு மிசைக்கீதம்
வாசலில் நிற்பது நாடி மலர்க்கத வத்தாளை
 மாசறு கற்பினர் போலநெகிழ்த்து மதுப்பூவின்
வீசலை யிற்குளிர் வாடை விரைத்தட மிக்கான
 வேணு வனத்தருள் சேரும் விருப்ப மிகுத்தோனே
கோசலை பெற்ற குணாகர கொட்டுக சப்பாணி
 கோகனகப்பெண் மனோகர கொட்டுக சப்பாணி 8.

தேனுக னுக்குயர் வானடையச் செய் திடத்தோனே
 தேவகி பெற்று யசோதை வளர்த்த திருப்பாலா
வானதி புத்திரன் வாய்மை பெறற்கு வயப்போரின்
 வானர சர்க்கெதி ராழியெ டுத்த மறத்தோனே
மீனுவ ரிக்குளி ராவண நட்பு விடுத்தேகும்
 வீடண னுக்கருள் வேணு வனத்து விருப்போனே
கூனுடை விற்கை யிராகவ கொட்டுக சப்பாணி
 கோகனகப்பெண் மனோகர கொட்டுக சப்பாணி.9.

சீதள மிக்க துழாய சையச்செறி பொற்றுமந்
 தேசுள்க வுத்துவ மார வடத்திரள் கொத்தாடக்
காதள விட்டழ கானகடைக்க ணருட்பாவை
 காணு மவர்க்கமு தாசன மொத்த களிப்பேற
மாதளம் வித்தன வாண்முறுவற்கு மயக்காகும்
 மாதா விருப்பொடு சூழமறுத்திடு மப்பாரி
கோதம னுக்கருண் மாதவ கொட்டுக சப்பாணி
 கோகனகப்பெண் மனோகர கொட்டுக சப்பாணி 10.

சப்பாணிப் பருவ முற்றிற்று.

188965

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[316-வது பக்கத் தொடர்ச்சி]

சப்தப்ரமாணம்

(4) கோசம்:—பதப்பொருளுணர்த்தும் நூலாகிய நிகண்டு முதலியவை கோசமாம் *. அதன் குணங்களில் சில அப்பர்பாசுரங்களிலும் காணலாம்:—

சிவனெனு நாமம் தனக்கே
யுடையசெம் மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு
மாகி லவன்றனையான்
† பவனெனு நாமம் பிடித்துத்
திரிந்துபன் னுளழைத்தால்
இவனெனைப் பன்னு ளழைப்பொழி
யானென் றெதிர்ப்படுமே.

தனித் திருவிருத்தம் 9.

பதங்களின்பொருள்களை நூல்களால் அறிந்துணர்வது ஞானத்திற்கு இன்றியமையாத வழியாகும். இதைத் திருநாவுக்கரசர் அடியிற் கண்டவாறு மிகவும் வற்புறுத்திக் கூறுவது காண்க:—

நூலால் நன்ரு நினைமின்கள் நோய்கெட
பாலா னைந்துட னுடும் பரமனர்
காலா லூன்றுகந் தான்கடம் பந்துறை
மேலால் நாஞ்செய்த வல்வினை வீடுமே.

திருக்கடம்பந்துறை - திருக்குறுந்தொகை 9.

(5) வியாகரணம்:-இதுவோர் தனிக்கலையாய்ப் பின் வரும். அப்பர் வியாகரணம் என்பது (ஆங்கிலத்தில்) ஷேக்ஸ்பியர் கால இலக்கணம் என்பதைப்பற்றி வரையறுத்தாற்போல்,தனியாய்க் கட்டுரை யெழுதவேண்டியிருப்பதால் இங்கு விவரம் காணவேண்டியது அநாவசியம். இங்குத் தருக்கத்தில் அதன் சம்பந்தம்—பதசக்தி கிரகித்தல், பகுதி விகுதி முதலியவற்றின் பொருளுணர்த்தப்பட்டுப் பதங்களின் சொரூபமும் அவற்றின்பொருளும் முணர்த்துவதாகும்; பேச்சுக்குப்பொருள் இன்றியமையாததலின்.

பேசப் பொருளிலாப் பிறவி தன்னைப்
பெரிதென்று சிறுமனத்தால் வேண்டி யீண்டு
வாசக் குழன்மடவார் போக மென்னும்
வலைப்பட்டு வீழாதே வருக நெஞ்சே!
தூசக் கரியுரித்தான் றூநீ ராடித்
துதைந்திலங்கு நூன்மார்பன் றொடர கில்லா
நீசர்க் கரிய நெய்த்தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

திருநெய்த்தானம் - திருத்தாண்டகம் 7.

(6) விவரணம் (Lexicon):— இதற்கு வெளிப்படுத்துவது என்னும் பொருள். சமானமாகிய பொருளுடைய வேறு பதத்தால் ஒன்றன்பொருள் கூறுவது விவரணமாகும். கடம்என்பதைக் கலசமென்பதுபோல் விவரணத்தன்மையை அப்பர் பின்வரும் பாசுரத்திற் குறிப்பிடுவது காண்க:—

உரையார் பொருளுக் குலப்பி லானை
யொழியாமே யெவ்வுயிரு மானான்றன்னைப்
புரையாய்க் கனமாய் ஆழ்ந்து ஆழாதானை
புதியனவு மாய்மிகவும் பழையான்றன்னைத்
திரையார் புனல்சேர் மகுடத் தானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிரையார் மணிமாட நீடூ ரானை
நீதனே னென்னேநா னினையா வாறே.

திருப்புன்கூர் திருநீடூர் - திருத்தாண்டகம் 7.

(7) சந்நிதானம்:—அதாவது அண்மை. முன்னரே கூறப்பட்டுள்ளது. ஒருபதத்தை யுரிமையால்பொருள் குறிப்பிக்கின்ற பிறபதங்கள் அணுகி நிற்றல் சந்நிதானம். இவ்வாறு கவிகளில் சொற்றொடர்கள்அமைந்து நிற்பது திருநாவுக்கரசர் தேவாரத்தைக் காட்டிலும் வேறு எந்த நூலினும் சிறப்பாக வெடுத்துச் சொல்ல ஒண்ணாது என்பது தேவாரம் கற்றோர் துணிபு:—

நங்கையைப் பாகம் வைத்தார்
ஞானத்தை நவில வைத்தார்
அங்கையில் அனலும் வைத்தார்
ஆனையி னுரிவை வைத்தார்
தங்கையில் வாளும் வைத்தார்
தாமரை மலரும் வைத்தார்
கங்கையைச் சடையுள் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே.

திருக்கழிப்பாலை - திருநேரிசை 1.

இச்செய்ளின்சொற்றொடர்களில் பதங்களின் அண்மை கத்தியநடையிலும் காண்பதற் கரிது.

(8) வாக்கியசேடம்:—என்பது ஒரு வாக்கியத்திலுள்ள பதத்தைச் சந்தேகமற நிச்சயிப்பதற்கு அநுகூலமான குறைவாக்கியம் வாக்கியசேடம்எனப்படும். வாக்கியம் முடிதற்பொருட்டாயினும், பொருள் முடிதற் பொருட்டாயினும் எஞ்சிநின்ற பதங்களை வருவித்து உரைத்தலும் வாக்கியசேடமென்று சொல்லுவாருமுளர். (i. e a principle clause, which completes the thought in a subordinate clause is called வாக்கியசேடம் in Tamil logic) (உ-ம்) திரு ஆக்கூர் திருத்தாண்டகம் (முற்றும்). அப்பர் பாசுரத்தில் வாக்கிய சேடத்தால் முடிவது காண்க:—

ஐத்தானத் தகமிடறு சுற்றி யாங்கே
யகத்தடைந்தா லியாதொன்று மிடுவாரில்லை
மைத்தானக் கண்மடவார் தங்களோடு
மாயமனை வாழ்க்கை மகிழ்ந்து வாழ்வீர்!

* "பகவனே ஈசன் மாயோன் சினனே புத்தன்"
நிகண்டு.

† பவனெம் பிரான்பனி மாமதிக்
கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவனெம் பிரானென்னை யாண்டுகொண்
டானென் சிறுமைகண்டு
அவனெம் பிரானென்ன நானடி
யேனென்ன இப்பரிசே
புவனெம் பிரான்றெரி யும்பரி
சாவ தியம்புகவே.

திருவாசகம்.

பைத்தானத் தொண்மதியும் பாம்பு நீரும்
படர்சடைமேல் வைத்துகந்த பண்பன் மேய
நெய்த்தான நெய்த்தான மென்பீ ராகில்
நிலாவாய புலாற்றுன நீக்க லாமே.

பல்வகைத் திருத்தாண்டகம் 2.

இங்ஙனம் சக்தி விருத்தியுடைய பதம் நால்வகையாகும். அவற்றை இனி ஆராய்வோம்.

(v) பதங்களின் வகை:—பதங்கள்-காரணம் (யோகம்), இடுக்குறி (ரூடி) காரணவிடுகுறி (யோகரூடி), யௌகிகரூடி என நான்கு வகுப்பின்பாற்படும்.

காரணம் அல்லது யோக பதமாவது — சமுதாய (பொது) சக்தியின்றி அவயவ சக்தியால் பதார்த்த ஞான முண்டாகின்றது. (உ-ம்)

செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி!
செல்லாத செல்வ முடையாய் போற்றி!
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி!
யாகாச வண்ண முடையாய் போற்றி!
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி!
வேளாத வேள்வி யுடையாய் போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

ஸ்ரீகையிலாயத் திருமலை - போற்றித்திருத்தாண்டகம் 3.

ரூடி அல்லது இடுகுறி:—எப்பதத்தில் அவயவ சக்தியின்றிச் சமுதாய சக்தியினுல்மாத்திரம் பதார்த்தஞான முண்டாகின்றதோ, அப்பதமே ரூடி பதமாம். பரம் என்னும்பதம் அவயவ சக்தியின்றிச் சமுதாய சக்தியினுல்மாத்திரம் பொருள்உணர்த்துவதறிக.

பாரார் பரவும் பழனத் தானைப்
பருப்பதத் தானைப் பைஞ்ஞீலி யானைச்
சீரார் செழும்பவளக் குன்றொப் பானைத்
திகழும் திருமுடிமேற் றிங்கள் சூடிப்
பேரா யிரமுடைய பெம்மான் றன்னைப்
பிறர்தன்னைக் காட்சிக் கரியான் றன்னைக்
காரார் கடல்புடைசூ ழ்ந்த ணாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே.

திருநாகைக்காரோணம் - திருத்தாண்டகம்.

யோகரூடி என்பது காரணவிடுகுறிப் பெயர். எப்பதத்தில் சமுதாய சக்தியாலும், அவயவ சக்தியாலும் பதார்த்த ஞான முண்டாகின்றதோ அப்பதம் யோகரூடி பதமாம். (உ - ம் ஒற்றியூர்)

ஒற்றி யூரு மொளிமதி பாம்பினை
யொற்றி யூருமப் பாம்பு மதியையே
யொற்றி யூர வொருசடை வைத்தவ
னொற்றியூர் தொழ நம்வினை யோயுமே.

திருவொற்றியூர் - திருக்குறுந்தொகை 1.

யௌகிகரூடி யென்பது யோகத்தால் ஒருவகைப் பொருளும் ரூடியால் மற்றொருவகைப் பொருளும் தருவது. இதனைப் *பொதுமொழி யென்று தமிழிலக்கணங்கள் கூறும்.

முடித்தாமரை யணிந்த மூர்த்தி போலும்
மூவருந் தாமாகி நின்றார் போலும்
கடித்தா மரையேய்ந்த கண்ணார் போலும்
கல்லலகு பாணி பயின்றார் போலும்
கொடித்தா மரைக்காடே நாடுந் தொண்டர்
குற்றேவல் தாமகிழ்ந்த குழகர் போலும்
அடித்தா மரைமலர்மேல் வைத்தார் போலும்
ஆக்கூரிற் றான்றோ யப்ப னாரே.

திருஆக்கூர் - திருத்தாண்டகம் 1.

* "ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்மொழி
பலபொரு ளனபொது விருமையு மேற்பன"
நன்னூல் - பெயரியல் 3.

மணமும் மணமின்மையும்

மனைவியையும் மக்களையும் உடைய ஒருவன் காலத்திகிரிக்கு அடிமை பூண்டுளன்; ஏனெனின் நல்வழியிலோ தீவழியிலோ அவன் நாடும் எல்லாப்பெருமுயற்சிக்கும் அவர்கள் தடைப்பொருள்களாய்நிற்பர். பொதுநலத்திற் கென இயற்றிய நற்கருமங்களும் அவை ஈன்றபுகழும், மணங்கொள்ளாதார் அல்லது மக்கட்செல்வமில்லாதார் இடமிருந்தேதான் பிறந்தனவென்று உறுதியாகக் கூறலாம். அவ்வின்மை, அன்பிலும் துறையிலும் பொதுநலத்தையே மணந்தது, பொதுநலத்தையே நிலையுறச் செய்தது எனக் கூறுதல் மிகையன்று.

ஆனபோதிலும்,மக்களுடையான் ஒருவன் வருங்காலத்தைத் தீரஎண்ணுதல் அறிவுடைச் செய்கையே; எவ்வாறெனின், மணவினைக் குட்பட்டான் மக்களைப் போற்றல் காத்தல் என்ற உறுதிமொழி பயந்தவனுவான்; அவ் வுறுதிமொழியை, எக்காலத்தும் நிறைவேற்றுதல் அவனது சிறந்த கடமையாம். மணங்கொளாரிற் சிலர் தமக்குரிய சுகத்தை நாடுவதோடு நின்றுவிடுகின்றார்; வருங்காலம் தங்களுக் குரியதன்றென்று தள்ளிவிடுகின்றனர். மற்றுஞ்சிலர் மனைவிமக்கள் செலவுதிட்டங்களன்றி வேறல்லவென எண்ணுகின்றார். அறிவிலாப்பேராசைச் செல்வவந்தர் சிலர் மக்கட்பேறின்மை, ஒரு புண்ணியமெனக் கருதி ஏமாப்புறுகின்றார்கள்; மக்களின்மை, அதற்கேற்ற செல்வப் பெருக்கிற்கு ஒரு துறையென ஊரார் எண்ணுவரென்று நினைப்பர்போலும். அல்லது, ஊரிலுள்ளார், மக்கட்பேறில்லா இன்னுன் செல்வர்கோன் எனவும், இன்னுன் மனைவியும் மக்களும் செல்லவந்தேய்க்கும் படையெனவும், பேசக்கேட்டனர் போலும்; பிறப்புரிமையை நாடுவார் மணம்விழையார் எனல், சாலும். முக்கியமாக, தன்னை மகிழ்வார்க்கும், சுழல்மனங் கொண்டார்க்கும், தனது கச்சையையும் காதணியையும் விலங்குகளே எனக் கருதவல்ல நுட்ப மதியுணர்ச்சி உடையார்க்கும், மணமின்மை உவப்புடைத்து. மனைவினைப் படா மாந்தர், சிறந்த நண்பர், சிறந்த தலைவர், சிறந்த பணியாளர் ஆவர்; எனினும் சிறந்த குடிமகார் ஆகார்; அவர்கள் குடும்பபார மின்மையால் எளிதில் தம்தேயத்தைவிட்டுச் செல்லுதல் கூடும்; தேயம் நீத்தோடியவரிற் பல்லோர் அவ்வகையினரே. மணமின்மை மதக்குருமார்களுக்கு நன்று; எவ்வாறெனில் அறம் என்னும் அருவிக்கு மனைவி மக்கள் என்றவாவியுளதேல், அது அவ்வாவியை, நிறைத்தபிறகேதான் வழியிலுள்ள நிலத்திற்குத் தண்ணீர் பயக்கும். மணமின்மை நீதிபதிகளுக்கு நன்மையுமன்று, தீமையு

மன்று; ஏனெனில், பிறர்சொற் கிளகலும், தீநெறியும் உடையரெனில் மனைவியைக் காட்டிலும் ஐம்மடங்கு கொடிய பொதுஊழியன் என அவனைக் கருதவேண்டும். போர்வீரர்களுக்கு, சேனைத்தலைவர், போர்புரியப் புகலும் ஊக்குமொழியில், அவர்தம் மனைவிமக்களைப் பற்றி நினைவூட்டுகின்றார். துருக்கியருக்குள்,மணத்தை இழித்துரைக்கின்ற கொள்கை போர்மகார்களைக் கயமைப் படுத்துகின்றதெனக் கூறுவதுண்டு. மனைவியும் மக்களும் மாந்தரினத்திற்கெல்லாம் ஓர் சிறந்த ஒழுக்கக்கோல் என்பதுபேருண்மை. மணவினைப்படாதவர், அறச்சாலைவழி மிக்குச் செல்கின்றாரெனினும்,மற்றொருபால் நோக்கின் குரூரமாயும் கடினமன முடையராயும் காணப்படுகின்றார். இதுதான் என்னையெனின், அவர்களது இரக்கமுடைமை சோதனைக்கு அடிக்கடி வருவதில்லை. ஆய்ந்தகுணமுடையவர், வழக்கத்தில்ஈடுபட்டு,அதனால் தம்நிலை மாறாமல், பொதுவாக அன்புடைக்கணவராய்த் திகழ்கின்றார். மலிஸஸ்என்றவொரு பெரியார் "அழியா நிலையைவிட, பழகிய மனைவியே நன்று" எனக் கொண்டார். கற்புடை மகளிர், பற்பல வேளைகளில், செருக்கும் இணங்காமையும் உடையராய் நடக்கின்றார்கள் ; அங்ஙனம் நடப்பது, தம் கற்பின் மதிப்பை நினைத்தேபோலும். மனைவி, கணவனை அறிஞன் என எண்ணிடில், அது, அவள் கற்பிற்கும் கணவன்வழி நிற்றற்குப், சிறந்த பிணையாகும்; தன்னை நேசித்திலன் என்று எண்ணிடில்,அவள்தன் கணவன்வழி நிற்றற்றன்மை வீயும். மனைவியொருத்தி வாலிபத்தின் நேயமங்கையாகவும் இடைப்பருவத்தின் அரிய துணைவியாகவும், முதுமைப் பருவத்தின் செவிலித்தாயாகவும் அமைகின்றாள். இத்தன்மையால் ஆடவன் எப்பருவத்தும் மணப்பதற்குக் காரணம் உண்டு எனலாம்; ஆயினும், "ஆடவன் எப்பொழுது மணத்தல் வேண்டும்?" என்ற வினவிற்கு விடை தந்தவர் பேரறிவாளிகளில் ஒருவரென மதிக்கப்பெறுகிறார்? "வாலிபனுக்கு நாள் இன்னம் வரவில்லை, வயோதிகனுக்கு நாளே யில்லை" என்று விடைதந்தார் ஒருவர்.

புன்கணவன் நன்மனைவியை யடைவது பலகால் உண்டு. அவ்வாறு அடைவது, அக்கணவனது அன்பு உண்டாயகாலத்து விளக்கமுறுதற்பொருட்டுப் போலும்; அல்லது மனைவி தன் பொறுமையை யெண்ணி மகிழ்தற்பொருட்டுப் போலும். நட்பினர் எண்ணத்திற்கு மாறாக, புன்கணவனைத் தேர்ந்தது மனைவியே யெனின், பொறையுடைமை பயக்கும் உளக்களிப்பு, எழாத நாளே யில்லை; அவ்வகையில்தான், அம்மனைவி தன்பிழையை, பிழையன்றென்று நிலைநாட்டமுடியும்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[315-வது பக்கத் தொடர்ச்சி]

2-ம் பத்து—8-ம் தசகம்.

6-ம் பாசுரம்.

தீர்த்த னுலகளந்த சேவடிமேற் பூந்தாமஞ்
சேர்த்தி யவையே சிவன்முடிமேற் றான்கண்டு
பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை
பேர்த்து மொருவராற் பேசக் கிடந்ததே.

திருவிக்கிரமாவதாரமெடுத்துத் தன்னுடைய தாமரைப்பூப் போன்ற திருவடியால் உலகங்களை அளந்தவனை ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய ஏவலால் சிவபூஜை ஆரம்பித்து,அவனுடைய திருவடிகளிலேயே அழகிய பூக்களைச் சமர்ப்பித்துப் பிறகு அந்தப் பூக்களையே கைலாசம்போய்ப் பரமசிவன் தலையில் கண்ட அர்ச்சுனன் "பரன்" யாரென்று தெரிந்துகொண்ட பிறகு கூட வெறொருவன், "பராபரக் கடவுள்" யாரென்று தெளிந்துகொள்ளும்படி பேசவும் வேண்டுமோ!

குறிப்பு:—தீர்த்தன்-தியானமனனங்களால் அபராதிகளின்பாவங்களைத் தீர்த்துச் சுத்தமாக்குகிறவன்."யத் பாதாப்ஜ நகோதகம் திருஜகதாம் பாபௌ வித்துவம்ஸகம" என்று "எவனுடைய திருவடிகளின் நகங்களிலிருந்து புறப்படுகிற கங்காதீர்த்தம், கங்கையைத் தவம்செய்து தேடிக் கொண்டுவந்த பகீரதன் பூர்வீகர்களை மாத்திரமன்றி மூன்று உலகங்களையும் பாபங்களினின்றும் விடுவித்துப் புனிதமாக்குகிறதோ" எனக் கூறியிருப்பதால், பகவானுக்குத் "தீர்த்தன்" என்ற அடைவு வெகு பொருத்தமுள்ளதென்று பூர்வ உரைகாரர்கள் எடுத்துக் கூறுவார்கள்.

7-ம் பாசுரம்.

கிடந்திருந்துநின்றளந்து கேழலாய்க்கீழ்ப்புக்குக்
கிடந்திடுந் தன்னுள் கரக்கு முமிழுந்
தடம்பெருந் தோளாரத் தழுவும் பாரென்னு
மடந்தையை மால்செய்கின்ற மாலார்காண்பரே.

இந்தப் பூமியை,தன்பக்தர்களுக்குத்தர்சனம்கொடுக்கும் நிமித்தமாய் நின்றும், சிங்காஸனமாய் வீற்றிருந்தும், பள்ளிகொண்டும் வாசஸ்தானமாய் உபயோகித்தும் அது யுகப்பிரளயத்தில் ஆழ்ந்து அமிழ்ந்துகிடந்தபோது வராகாவதாரமெடுத்துக் கொம்புகளால்உயர்த்தி நிலைபெறச் செய்தும், பின்னை ஒருக்கால் அளந்தும் பிரளய காலத்தில் தன் திருவயிற்றுக்குள் வைத்து ரக்ஷித்தும், சிருஷ்டிகாலம் வந்தபோது வெளிப்படையாக்கியும் தன்னிஷ்டம் போலே இஷ்டா விஷயமான சேஷ்டைக்கு எவன் உள்படுத்தினானோ அவனுக்கு அந்தப் பூமி உரித்தானதென்று விளங்கவில்லையா ?

குறிப்பு:—இந்தஉலகத்தை எடுத்துரைத்ததுஎல்லா உலகங்களுக்கும் உபலக்ஷணம்.

8-ம் பாசுரம்.

காண்பா ரெம்மீசன் கண்ணனையென் காணுமா
றாண்பேசி லெல்லா வுலகுமோர் துற்றாற்ரு
சேண்பால வீடோ வுயிரோமற் றெப்பொருட்கு
மேண்பாலுஞ் சோரான் பரந்துளனுமெங்குமே.

எம் மீசனை கண்ணனைக் காண்பார் யார் ? ஒருவரும் அவனை அளவிட்டு அறியக்கூடியவரல்லர்.காண்கைதான் எவ்வண்ணம் ? யுகப்பிரளயத்தில் எல்லா

உலகங்களையும் விழுங்கினபோது ஒரு கவளத்துக்கு நிறையவில்லை. அவன் வாசஸ்தானமோ மஹா உன்னதமாய் அண்டங்கள் எல்லாவற்றிற்கும் வெளியே ஜோதிமயமாய்ப் பிரகாசிக்கும் வைகுண்டம். "உயிர்" அதாவது முக்தாத்மாக்களென்ன மற்றுள்ள ஸர்வ பதார்த்தங்களையும் அஷ்டதிக்குக்களிலும் கொஞ்சம் கூட இடையீடின்றி வியாபித்து உளனாயிருக்கிறான். இப்படி ஒருவிதத்தாலும் அளவிடக்கூடாதவனை உலகத்தீரே ஆசிரியுங்கோள்.

9-ம் பாசுரம்.

எங்குமுளன் கண்ண னென்ற மகனைக்காய்ந்
திங்கில்லை யாலென் றிரணிய றூண்புடைப்ப
வங்கப் பொழுதே யவன்வீயத் தோன்றியவென்
சிங்கபிரான் பெருமை யாராயும் சீர்மைத்தே.

அவதாரிகை:—முன்பாசுரத்தில், எங்கும் ஈசன் வியாபித்திருக்கிறானென்று அருளிச் செய்தார். இப்பாட்டில் எவ்வெவற்றிலும் உள்புகுந்து கிடக்கும் அவனுடைய அந்தர்வியாப்தியை அருளிச்செய்கிறார். "அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வியாப்பியம் நாராயண ஸ்தித" என்று வேதம் இப்பொருளையே அவைகளின் பிரயோஜனம் என்னவென்று காட்டாதே கற்பிக்கிறது. ஆழ்வாரோ,இந்த இரண்டும், பக்தனை ரக்ஷிக்கவும் அவனுக்கு எவ்விடத்திலும் தான் உளன் என்று பிரத்தியக்ஷமாய்க்காட்டி அவனைத் தன்பக்கல் வீழ்ந்து உஜ்ஜீவிக்கவும் செய்வதுதான் ஈசன் கருத்து என்று கற்பிக்கிறார்.

உரை:—"எங்கும் நாராயணன் உளனென்றாயே மகனே, இங்கு இல்லையே," யென்று ஹிரணியன் தூணை வாளால் வீச அங்கேயே அப்பொழுதே அவ்விரணியனை ஸம்ஹரிக்க உத்பவித்த சிங்கப்பெருமானின் சீர்மையாகிய சர்வேசுவரத்தை ஒருவருக்கு அறியமுடியுமோ ? ஆனபின்பு, அவனை ஆசிரியுங்கோள் என்கிறார்.

10-ம் பாசுரம்.

சீர்மைகொள் வீடு சுவர்க்க நரகீறு
வீர்மைகொள் தேவர் நடுவாமற் றெப்பொருட்கும்
வேர்முதலாய் வித்தாய்ப் பரந்து தனிநின்ற
கார்முகில்போல் வண்ணனென் கண்ணனை நான்
[கண்டேன்

சீர்மைகொள் வீடு - சுவர்க்கத்துக்கு ஒப்பிட்டால் அதைவிடச் சிறந்ததான மோக்ஷம், சுவர்க்க நரகீறு - சுவர்க்க முதல் கடைசியாகிய நரகம் வரைக்கும்,நடுவா-நடுவிலிருக்கிற மற்றெப் பெயர்க்கும், ஈர்கொள்-இவற்றை யநுபவிக்கிற தேவமனுஷ்யாதி ஸகலஆத்மவஸ்துக்களுக்கும், வேர் முதலாய் - வேருக்குள் முக்கியமாய் அதாவது தாங்கும் ஆதாரவேராய், வித்தாய் - விதையாய், பரந்து - எங்கும் வியாபித்து,தனிநின்ற - தான் மாத்திரம் இவைகளை நடத்தும் நியந்தாவாய்-, இவைகளுடன் கலப்பன்றிக்கே வேறொரு தனி வஸ்துவாய், கார்முகில்போல் வண்ணன் - வருஷாகாலத்து நீருண்ட மேகம்போல் வர்ணமுள்ள, என் கண்ணனைக் கண்டேனே.

குறிப்பு:—1ஈர்கொள்தேவர்- இரண்டுவித பலன்கள் அதாவது சுவர்க்கத்தில் நல்ல பலன்கள், நரகத்தில் பாப பலன்கள். இவ்விரண்டையும் அநுபவிக்கிறதேவ மனுஷ்யாதிகள்.

2 கீழ் ஒன்பது பாட்டுவரையில் பகவான் சர்வேசுவரன் ஆகையால் நீங்கள் ஆசிரியுங்கோளென்று உலகத்தாருக்கு உபதேசம் செய்தவர் இப்பாசுரத்தில் "நான் கண்ணனைக் கண்டுகொண்டேனே" என்று சுயலாபத்தைக் கொண்டு முடிப்பது எப்படியென்ன? ஆழ்வார் உலகத்தாரை அழைத்து ஹிதபோதனைகளைச் செய்துவந்தாரேனும் மற்றொருவரும் ஆழ்ந்த பக்தியுடன் கண்ணனை வழிபட்டுத் தேறாமல்போனதைக் கண்டு யானகிலும் இவர்கள்போலாகாமல் அவனைக் கண்டுகொள்ளப் பாக்கியம்பெற்றேனேஎன்று சந்துஷ்டர் ஆகிறார் என்று அறியத்தக்கது.

11-ம் பாசுரம்.

கண்டலங்கள் செய்ய கருமேனி யம்மானை
வண்டலம்புஞ் சோலை வழுதிவள நாடன் [வல்லார்
பண்டலையிற் சொன்ன தமிழாயிரத் திப்பத்தும்
விண்டலையில் வீற்றிருந் தாள்வரெம்மா வீடே.

ஆழ்வாரோடு கூடின கலவையால் பகவானுக்கு ஏற்பட்ட முகமலர்ச்சியிலே அவன் கண்களின் தலங்கள் சிவப்ப இருக்க, அவனை வண்டலம்பும் சோலைவழுதி நாடனான ஆழ்வார் ஸ்வரயுக்தமாய்ப் பாடின இந்தத் திருவாய்மொழியை அப்பியசிப்பவர் வைகுண்டத்தில் வீற்றிருந்து சுவயாராஜ்ஜியம்போல் ஆளுகைக்கு உரித்தாவர்.

தமிழ்ப் பாடம் 17.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[309-வது பக்கத் தொடர்ச்சி]

இசைமுகந்த வாயு மியறெரிந்த நாவுந்
திசைமுகந்தா லன்ன தெருவும்—வசையிறந்த
பொன்னாடு போந்திருந்தாற் போன்றதே போர்
நன்னாடர் கோமா னகர். 69. [விதர்ப்ப

தேவர்பணி யேற்றுப் புறப்பட்ட நளன் தமயந்தி வாழும் குண்டினபுரம் போய்ச் சேர்ந்தான்.

தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே—யாங்கு
மதுநோக்குந் தாரானும் வாணுதலுந் தம்மிற்
பொதுநோக் கெதிர்நோக்கும் போது. 70.

பதப்பிரிவு:-தேன் குவளைதன்னிலே செம் தாமரை மலர பூ குவளை தாமரைக்கே பூத்தது. ஆங்கு மது நோக்கும் தாரானும் வாள் நுதலும் தம்மில் பொது நோக்கு எதிர் நோக்கும் போது.

அன்வயம்:—ஆங்கு, மதுநோக்கும்தாரானும் வாள் நுதலும் தம்மில் பொதுநோக்கு எதிர்நோக்கும் போது, தேன்குவளை தன்னிலே செந்தாமரைமலரப் பூங்குவளை தாமரைக்கே பூத்தது.

பதவுரை.

ஆங்கு - அக் குண்டினபுரத்துக் கன்னிமாடத்தில், மது - வண்டுகள்

நோக்கும் - பார்த்துவருகின்ற
தாரானும் - மாலையை அணிந்த நளனும்,
வாள் - ஒளிபொருந்திய
நுதலும் - நெற்றியையுடைய தமயந்தியும்,
தம்மில் - தங்களுக்குள்
பொது - பொதுவாக
நோக்கு - பார்வைஎறிந்து, பிறகு
எதிர் - ஒருவரை யொருவர் நேராக
நோக்கும்போது - நோக்கிய சமயத்தில்,
தேன் - மதுரமாகிய
குவளைதன்னில் - தமயந்தியின் குவளைமலர்போ [ன்ற கண்களில்
செம் - சிவந்த
தாமரை - நளனுடைய தாமரைபோன்ற கண்கள்
மலர - மலர (பின்னும்)
பூ - அழகிய
குவளை - குவளைபோன்ற அவள் கண்கள்
தாமரைக்கே-தாமரைபோன்றஅவனதுகண்களிலே
பூத்ததே - மலர்ந்தன.

கருத்து:—தமயந்தியும் நளனும் எதிரெதிர் நோக்கியபோது, அவன்கண்ணின் பிரதிபிம்பம் இவள் கண்களிற் குள்ளும், மறுபடி இவள்கண்ணின் பிரதிபிம்பம் அவன் கண்களிற்குள்ளும் தோன்றின.

விரிவுரை:—நளனும் தமயந்தியும் இப்பொழுது சந்திக்கின்றனர். இடமும் கன்னிமாடத்தைச் சூழ்ந்த நந்தவனமா யிருத்தல் வேண்டும். இந்திரன் தந்த மந்திரத்தால் காவலர்காணுமல் நளன் அங்கு வரமுடிந்தது. வந்ததும், நளன் தமயந்தியைக் கண்ணுற்ருன். தமயந்தியும் அவனைக் கண்ணுற்ருள். ஆனல், அறிமுகமில்லாத இருவர் ஒருவரை ஒருவர் எதிராக நோக்குவதற்கு நாணிப் பொதுவாக எல்லாவற்றையும்பார்ப்பதுபோல் சேர்த்துப் பார்த்திருப்பார். இது பொது நோக்கு. பிறகு அவள் தன்னைப் பார்க்காதபோது இவன் அவளை உற்று நோக்குவான். அவளும் அவ்வாறே. இப்படிச் சிறிது நேரம் கண்களவு ஆடியபின் இருவர் கண்பார்வைகளும் சந்திக்க நேரும். இதுவே எதிர்நோக்கு. ஒருவரது அழகை ஒருவர் கண்டு அவரவர் கண்கள் மலர்வனவாயின. அந்நிகழ்ச்சியைத்தான் புகழேந்தி இங்குக் குவளை தாமரையினுள் மலர்வதும், அத்தாமரை மீண்டும் குவளையுள் மலர்வதும் ஆகப் புணைந்து கூறினர்.

குறிப்பு:—1. குவளை தாமரை என்பன இங்கு அவை போன்ற கண்களை யுணர்த்தியபடியால் அவை உவமையாகுபெயர். (உவமையாகுபெயர் வேறு, உவமையணி வேறு.)

2. வாள் நுதல், என்பதற்கு ஒளி பொருந்திய நெற்றி, என்பது மட்டுமே அர்த்தமாயிருந்தாலும், அதை உடையதமயந்தியை இத்தொடர் காட்டுவதால், முன் 41-வது செய்யுளில் போற்றேடி என்றதுபோல், இதுவும் அன்மொழித்தொகை.

நீண்ட கமலத்தை நீலக் கடைசென்று
தீண்டு மளவிற் றிறந்ததே—பூண்டதோர்
அற்பின்ருழ் கூந்தலாள் வேட்கை யகத்தடக்கிக்
கற்பின்ருழ் வீழ்த்த கதவு. 71.

கருத்து:—தமயந்தியின் கடைக்கண்பார்வை பட்டதும் நளனுடைய நிறை சிறிது தளர்ந்துபோயது.

உய்ஞ்சு கரையேற வொட்டுங்கொ லொண்டொடி
நெஞ்சு தடவு நெடுங்கண்கள்—விஞ்சவே [யாள்
நீண்டதோ வங்ஙனே யிங்ஙனே நீண்மலராள்
ஆண்டதோள் மன்ன னழகு. 72.

பதப்பிரிவு:—உய்ஞ்சு கரை ஏற ஒட்டும்கொல் ஒள் தொடியாள் நெஞ்சு தடவும் நெடும் கண்கள் விஞ்சவே நீண்டதோ அங்ஙனே இங்ஙனே நீள் மலராள் ஆண்டதோள் மன்னன் அழகு.

அன்வயம்:—ஒள்தொடியாள் நெஞ்சுதடவும்நெடுங்கண்கள் உய்ஞ்சு கரையேற வொட்டும்கொல்? அங்ஙனே, நீள்மலராள் ஆண்ட மன்னன்தோள் அழகு விஞ்சவே நீண்டதோ இங்ஙனே.

கருத்து:-தமயந்தியின் மார்பில் தன் பார்வையைச் செலுத்திய நளனுடைய கண்கள், அதனைவிட்டு அகல இயலவில்லை. அப்படியே நளனது தோள்களின் அழகில் ஆழ்ந்த தமயந்தியின் கண்களும் அப்பார்வைவிட்டகல முடியவில்லை

ஒள் - ஒளி பொருந்திய
தொடியாள்-வளையல்களை யணிந்த தமயந்தியின்
நெஞ்சு - மார்பை
தடவும் - எட்டிய (நளனுடைய)
நெடும் - பெரிய
கண்கள் - கண்கள் (அவளை)
உய்ஞ்சு - (காதல் என்னும் கடலை) தப்பி
கரை - கரையில்
ஏற - ஏற
ஒட்டும்கொல் - விடுமோ!
அங்ஙனே - அப்படியே
நீள் - பெரிய
மலராள் - மலரில் வசிக்கும் வீரஇலக்குமியின்
ஆண்ட - ஆட்சிக்கு இடமாகவுடைய
மன்னன் - மன்னனது
தோள் . தோள்கள்
அழகு - அழகினோடு
விஞ்சவே - அதிகமாகவே
நீண்டதோ - நீளமானதோ (ஆதலால்)
இங்ஙனே - இப்பக்கத்திலும் (தமயந்தியின்
பாலும்) அவள் கண்கள், உய்ந்து
கரையேற வொட்டுங் கொல்?

விரிவுரை:—இச்செய்யுளிற்குப் பலவேறு விதமாகப் பொருள் உரைப்பர். எனினும் முன்பின் செய்யுள்களைக் கருதினல் இங்குக் கூறிய அர்த்தம் ஒருவாறு பொருத்தமுடையதாகக் காணலாம். முன்செய்யுளில் நளனது மனநிலையைக் கவி கூறினர். இந்தச் செய்யுளில் இருவரும் ஒருவரழகை ஒருவர் மாந்தியதைக் கூறுகின்ருர். அடுத்த செய்யுளில் தமயந்தியின் நிலைமையைக் காட்டுவார்.

காதலென்னும் கடலிலிருந்து இருவர் மனங்களும் கரைஏற முயல்கின்றன. ஆனல், தமயந்தின் விம்மிப் பூரித்த மார்பினது அழகைக்கண்ட கண்கள் நளனது மனதைக் கரையேறவிட்டாமல் தடுத்தன. அவ்வாறே நளனது தோள்கள் தமயந்தியின் கண்களாலும் அளக்க முடியாமல் பெரியனவாதலால், அவைகளினழகைக் காணலுற்ற தமயந்தியின் கண்களும் அவளது மனதைக் கரையேற விட்டதில்லை. அங்ஙனே என்பதற்கு 'அப்படியே' என்றும், இங்ஙனே என்பதற்கு 'இப்பக்கத்திலும்' என்றும் அர்த்தம் கொள்ளவேண்டும். தமயந்தியின் மார்பைப்பார்த்த கண்கள் நளனைக் கரையேற விடவில்லை; அப்படியே நளனது தோளைப் பார்த்த கண்கள் இப்பக்கத்தில் தமயந்தியைக் கரையேற விடவில்லை. அவனுடைய கண் இவள் மார்பிலும், இவளது கண் அவன் தோளிலும் தங்குவது இயல்பே. சீதையும் இராமனும் முதல்முதல் கண்ணுற்றதை வருணிக்கின்ற கம்பர் செய்யுள் இதற்கு ஆதாரமாகும்:—

"நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் றோளி லாழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணுந்
தாக்கணங் கனையவள் தனத்தில் தைத்தவே."

அங்ஙனே விஞ்சவே நீண்டதோ, என்பதற்கு, அப்படியே தமயந்தியின் பார்வைக்கு அடங்காதனவாய் அவள் எவ்வளவுதூரம் பார்த்தாலும் அதற்குமேலும் ஒருபடி அதிகமாகவே உயர்ந்து இருந்தனவோ நளனது தோள்களும்? அதனல்தான் அவளும் உய்ந்து கரையேற முடியவில்லையோ? என்ற பொருள் தரும். "வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா வாம நெடுந்தோள்" என்று பின் கலிநீங்கு காண்டத்தில் வந்திருப்பது இந்த அர்த்தத்திற்கு ஆதாரமா யிருக்கின்றது.

குறிப்பு:— உய்ந்து என்பது, உய்ஞ்சு என்றும் போலியாக வரும். ஐந்து என்பது அஞ்சு என்று வருகிற வழக்கம் யாருக்கும் தெரிந்திருக்கும். இப்படி அர்த்தம் மாறுமல் ஒரே பதத்தில் எழுத்து மாறி வருகின்ற வழக்க முண்டானல் அதற்கு இலக்கணத்தில் போலி என்று பெயர். நாயிறு ஞாயிறு. கலம் கலன். அய்யன் ஐயன் என்பன போலிகளுக்கு உதாரணம். இதன் இலக்கணத்தைப் பிறகு பார்ப்போம்.

மன்னுகத் துள்ளழுந்தி வாரணிந்த மென்முலையும்
பொன்னுணும் புக்கொளிப்பப் புல்லுவனென்—
எடுத்தபே ரன்பை யிடையே புகுந்து [றன்னு
தடுத்ததே நாணுந் தறி. 73.

மன்னவனைத் தன் மார்புறத் தழுவிக்கொள்ளவேண்டும்என்ற ஆசை தமயந்திக்கு எழுந்தபோதிலும், அச்செய்கையை நாணத்தால் செய்யாதொழிந்தாள், என்பது இச்செய்யுளின் கருத்து. பிறகு அவள் ஒருவாறு தன் உள்ளத்தை அடக்கிக்கொண்டு கேட்கின்ற வார்த்தைகள் அடுத்தசெய்யுளில் வருகின்றன.

காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவனே விஞ்சைக் கிறைவனே—தேவனே
உள்ளவா சொல்லென்ரு ளூசற் குழைமீது
வெள்ளவா ணீர்சோர விட்டு. 74.

பதப்பிரிவு:—காவல் கடந்து எங்கள் கன்னிமாடம் புகுந்தாய் யாவனே விஞ்சைக்கு இறைவனே தேவனே உள்ள ஆ சொல் என்ருள் ஊசல் குழை மீது வெள்ளம் வாள் நீர் சோர விட்டு.

அன்வயம்:—வாள் நீர் வெள்ளம் ஊசல் குழை மீது சோரவிட்டு, "காவல்கடந்து எங்கள் கன்னி மாடம் புகுந்தாய், விஞ்சைக்கு இறைவனே? தேவனே? யாவனே? உள்ள ஆ சொல்" என்ருள்.

பதவுரை.

தமயந்தியானவள் -
வாள் - வாள்போன்ற தன் கண்களிலிருந்து

நீர் - நீரை
வெள்ளம் - வெள்ளமாக
ஊசல் - முன்னும் பின்னும் ஊஞ்சலைப்போல்
அசைகின்ற
குழைமீது - குண்டலங்களின்மேல் விழும்படி
சோர - சொரிய
விட்டு - விட்டவளாய் (நளனைப்பார்த்து)
"காவல் - காவலை
கடந்து - கடந்து
எங்கள் - எங்களுடைய
கன்னிமாடம் - கன்னிமாடத்திற்குள்
புகுந்தாய் - புகுந்தவனே, (நீ)
விஞ்சைக்கு - வித்தியாதரர் உலகிற்கு
இறைவனே - அரசனே? (அல்லது)
தேவனே - தேவன்தானே?
யாவனே - (அல்லது, வேறு) யாவனே?
உள்ள ஆ - உள்ளபடி
சொல் - சொல்
என்ருள் - என்றனள்.

விரிவுரை.—நளனைக்கண்ட சந்தோஷத்தினல் தமயந்தியின் கண்களினின்று நீர் பெருகியது. வாள், என்பது வாள்போன்ற கண்ணைக் குறிக்கின்ற உவமை ஆகுபெயர். வாள்போன்ற கண்களிலிருந்து பெருகிய வெள்ளம் குழைகளின்மீது விழுந்ததாம். குழை காதில் அணியும் ஆபரணம். கண்கள் சொரிந்த நீர் குழையின்மேல் விழுவதென்றல் அவளது கண்கள் காதளவு நீண்டன என்பது தெரியவருகின்றது.

அக் குழைகளை ஊசல்குழை என்ருர் கவி. ஊஞ்சலைப்போல் முன்னும்பின்னும் ஆடியாடி அவள்குண்டலங்கள் அசைந்திருத்தல்வேண்டும். அசைந்ததோ இல்லையோ என்னும்படி தலை மிகச் சிறிது அசைந்தாலும் அவ்வசைவைக் காதில் அணிந்த குண்டலங்கள் தோன்றும்படி ஆடிக் காட்டிக்கொடுத்துவிடும். ஒன்றினைப்பார்த்து, இது நாம் எண்ணியதோ வேறென்ருே என்ற சந்தேகம் கொண்டால் நம் தலை சிறிதளவு 'இல்லை, ஆம்' என்பதை மாறிமாறி யுணர்த்துங் குறிப்பினில் அசைவது இயற்கை. தமயந்தியின் தலையும் அவ்வாறு சந்தேகத்தினல் இச்சமயம் அசைந்திருக்கவேண்டும். ஆதலாற்ருன் அவள் அணிந்திருந்த குண்டலங்கள் முன்னும்பின்னுமாய் ஊஞ்சலாடின. ஆயின், அவளுக்கு உண்டான சந்தேகம்இந்தச்சந்தர்ப்பத்தில்யாவதாயிருத்தல்கூடும் என்றுஊகிப்பது அருமையன்று. "அன்னம் உரைத்த நளன் இவன்தானே? அவனயின் கன்னிமாடத்துள் கரந்து வந்திரானே, ஆதலால் அவன் அல்லனே?" என்னும் சந்தேகமும் அவளடைந்த சந்தோஷத்திற்கிடையே சிறிதளவு கலந்திருக்க வேண்டுமென்று எண்ண இடமுளது.

கம்பருக்கும் புகழேந்திக்கும் இருக்கின்ற கருத்துத் தொடர்பைஇதற்குமுன் இரண்டொரு இடங்களில் கண்டோம். கம்பர், சிலப்பு அரற்றும், என்று விட்டிருக்க, அவை என்ன சொல்லி அரற்றும் என்பதைப் புகழேந்தி காட்டினர். இதற்குமாருக, 'முலை முகத்தைப் பார்த்து மயங்கினள்' என்று மாத்திரம் கூறிய புகழேந்தியின் கருத்தைக் கம்பர்செய்யுளால் விளக்க இயன்றது. அவ்விதமே, இங்குத் தமயந்தியின் குண்டலங்கள் எந்தச் சந்தேகத்தின் காரணமாய் அசைந்திருக்கவேண்டுமென்பதையும் கம்பரைக் கொண்டே உணரலாம்.

விச்வாமித்திர முனிவனுடன் மிதிலைக்குள் புகுந்து வீதிவாய் நடந்தஇராமனைச் சீதைதன்கன்னிமாடத்திலிருந்துகண்ணுற்றாள். கண்டவளவிலேயே காதல்கொண்டனள். பிறகு அவன் சிவபிரான்பிடித்தவில்லை ஒடித்தபோதுஇவள் அருகிருந்துபார்த்ததில்லை. எனினும், தோழிமார்கூறிய அடையாளங்களால் வில்லைஒடித்துத் தன்னை மணக்கஇருப்பவன், முன்தான் கன்னிமாடத்தில் கண்டு காதல்கொண்ட அக் கரியசெம்மலாகவே இருக்கவேண்டுமென்று ஒருவாறு உறுதிகொண்டாளெனினும், ஒருவேளை அவன் அல்லாதுபோவானோ என்னும் சந்தேகம் திருமண நன்னாள்வரையிலும்கூட அவளை விட்டபாடில்லை. ஏனெனில், அந்நாள் மணக்கோலம் இவளுக்குச் செய்வித்த தோழியர் குண்டலம் இட்டனர்என்பதைச் சொல்லவருகின்றகம்பர் பாடிய பாடலால் இது விளங்குகின்றது :—

வெள்ளத்தின் சடிலத் தான்றன்
வெஞ்சிலை யிறுத்த வீரன்
தள்ளத்தன் னாவி சோரத்
தனிப்பெரும் பெண்மை தன்னை
அள்ளிக்கொண் டகன்ற காளை
யல்லன்கொ லாங்கொ லென்பாள்
உள்ளத்தி னாச லாடக்
குழைகிழ னுமிழ விட்டார்.

“கன்னிமாடத்திலிருந்த தனது உள்ளத்தை முன் கவர்ந்துபோன இளவல்தான் பின் சிவனது வில்லை முறித்த வீரனோ அல்லனோ என்று முன்னும் பின்னும் அலையும் அவள் மனதோடு சேர்ந்து ஊஞ்சலாடும்படி சீதையினது காதில் குண்டலங்களைத் தொங்கவிட்டனர்,” என்பது இச்செய்யுளின் பொருள்.

இவ்விதம் புகழேந்தி குறிப்பில் விட்ட கருத்தைக் கம்பரில் பரக்கக்கண்டு தமயந்தியின் சந்தேகத்தை அவள் அணிந்திருந்த குழையின்மூலமாய்த் தெரிந்து கொள்கின்றோம்.

—

தீராத காமத் தழலைத்தன் செம்மையெனும்
நீரா லவித்துக் கொடுநின்று—வாராத
பொன்னுட ரேவலுடன் போந்தவா சொல்லித்தன்
நன்னாடுஞ் சொன்னா னளன். 75.

“தான் நளன் என்பதையும் தேவர்களுக்குத் தூதனாய் வந்திருப்பதையும் அவன் தமயந்திக்குக் கூறினான்”, என்பது இச்செய்யுளின் கருத்து. கூறி அடுத்த செய்யுளில் தன் உரையை முடிக்கின்றான்.

—

என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனை—மென்மாலை
சூட்டுவா யென்றான் றொடையிற்றேன் றும்பிக்கே
ஊட்டுவா னெல்லா முரைத்து. 76.

பதவுரை.

தொடையில் - பூமாலையிலிருக்கின்ற
தேன் - தேனை
தும்பிக்கு - வண்டுகளுக்கு
ஊட்டுவான் - ஊட்டுகின்றவனாகிய நளன்
எல்லாம் - எல்லா விஷயங்களையும்
உரைத்து - (தமயந்திக்கு) சொல்லி,
“என் - என்னுடைய
உரையை - வார்த்தைகளை
யாது - என்னவென்று
இகழாது - அவமதிக்காமல்,
இமையவர் - தேவர்கள்
வாழ் - வாழ்கின்ற
பொன் உலகம் - தேவலோகத்தை
காக்கும் - ஆள்கின்ற
புரவலனை - இந்திரனை
மென்மாலை - மெல்லிய சுயம்வர மாலையை
சூட்டுவாய் - சூட்டக் கடவாய்”
என்றான் - என்று சொன்னான்.

விரிவுரை:—“எங்களிலே தேமாலை சூட்டும்படி சொல்” என்றுஇந்திரன் ‘எங்களுக்குள்ளே யாரேனும் ஒருவருக்கு மாலை சூட்டும்படி சொல்’ என்றுதான் சொல்லியனுப்பினான். (65-வது செய்யுள்). இருந்தாலும் நளன் அவ்வாறு கூறாமல் “இந்திரனுக்கு மாலையிடு” என்று மற்றத் தேவர்களை விட்டுவிட, அவனை அறியாமலே, நேர்கின்றது. தமயந்தியின்மீது இவனுக்கு இருந்த அன்பு சுயநயக் காதல் அன்று. ஆகையால், தனக்கு அவள் வாய்க்காமற் போயினும், சிறு தேவர்களை மணப்பதின்றி அவள் தேவேந்திரனையே மணக்கட்டும் என்று அவள்பொருட்டே கூறியதெனக் கொள்ளல் வேண்டும். நளன் வள்ளலாதலால் அவன்வாயில் இவ்வாறு தூதும் மாறிவந்தது.

இவன் நளனோ அல்லனோ என உற்ற சந்தேகத்தைத் தமயந்தி அவனைகேட்டுத் தீர்த்துக்கொண்டாள். எந்த நிலையிலும் மாதருக்கு மனத்திட்பம் அதிகமாதலால் இவ்வாறு அவள் கேட்கவும் தெரிந்துகொள்ளவும் நேர்ந்தது. அந்நிலையில்கூட அவள் தன்னை யாவளென்று காட்டிக்கொள்ளாமல் ‘எங்கள் கன்னிமாடம்’ எனத் தன்னைப் பொதுவாகவே பேசிக்கொண்டனள். நளனோ அவளைத்தமயந்திஎன்று ஒருவாறு ஊகித்திருக்கமுடியுமே அல்லாது நிச்சயமாய்த் தெரிந்திருக்கமுடியாது. எனினும் ஊகித்ததைக்கொண்டே தான் சொல்லவந்த தூதை உரைக்கப்படாது என்பதை அயர்ந்து, வினவித் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதும் அவனுக்குத் தோன்றாமல், “மென்மாலை சூட்டுவாய்” என்று முன்னிலையிலேயே கூறிவிட்டான். இதைக்கேட்க அவளுக்குத் துன்பம் பெரியதாயிருக்குமெனினும் நினைவும் வாயும் அயராமல் தன்னைப் படர்க்கையிலேயேவைத்து வேறு யாரையோ போல் பதில்சொல்லி அனுப்பிய நுண்மையைப் பின்வரும் இரண்டு பாசுரங்கள் கூறுகின்றன.

—

இயமரநின் றார்ப்ப வினவளைநின் றேங்க
வயமருதோண் மன்னா வகுத்த—சுயம்வரந்தா
னின்பொருட்டா லென்று நினைகென்றா ணீள்குடையான்
தன்பொருட்டா னைவா டளர்ந்து. 77.

“முரசும் காளமும் சங்கமும் ஒலிக்க நிகழ்கின்ற இந்தச் சுயம்வரம், வேந்தனே, உன்பொருட்டாகத் தான் என்பதைத் தெரிந்துகொள்” என்றாள் தமயந்தி. தனக்கு நடக்கின்ற சுயம்வரம் இது என்று அவள் சொல்லவில்லை. நளனைக்கருதியே இந்தச்சுயம்வரம்நாட்டப்பெற்றிருக்கின்றதென்பது அவனுக்குத் தெரிய வேண்டியது அவசியமாதலால் இதனைக் கூறினாள். தான் காதல்கொண்டிருந்தவொருவன், “நீ வேறொருவனை மணந்துகொள்” என்று கைகாட்டி விடுவானால் பிறகு அவன்முன் தன் முகத்தைத் தெரிவித்துக்கொள்ள ஒருத்திக்கு மனம் வருமோ? ஆதலால் தான் தமயந்தி அல்லாள்போல் பாவனை புரிகின்றாள். தன்னை இவ்விதம் படர்க்கையாக்கிக்கொண்டது அடுத்த செய்யுளில் இன்னும் தெளிவாகக் காண்கின்றது.

—

போதரிக்கண் மாதராள் பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ டவையகத்தே—சோதிச்
செழுந்தாள வெண்குடையாய் தேவர்களு நீயும்
எழுந்தருள்க வென்றா ளெடுத்து. 78.

“பிரகாசம் பொருந்திய செழுமையான வெண்முத்தக் குடையையுடைய அரசனே, தாமரை மலர் போன்றனவும் செவ்வரி படர்ந்தனவுமாகிய கண்களையுடைய தமயந்தி, தமக்கு அழகிய மாலையைச் சூட்ட வேண்டுமென்ற ஆசையுடைய மற்றஅரசர்களோடே, சுயம்வர மண்டபத்திற்கு நீயும் தேவர்களும் வந்து சேரக்கடவீர்” என்று கூறினாள். தான் தமயந்தி அல்லள் என அவன் நினைக்கும்பொருட்டே ‘போதரிக்கண் மாதராள்’ என வர்ணித்துப் படர்க்கையில் அவள் கூறியவளாதல்வேண்டும்.

இதன்பின் நான்கு செய்யுள்கள், நளன் திரும்பித் தேவர்களிடம் சென்று நடந்ததைச் சொல்லியதும், அவர்கள் இவனது சத்தியத்தை மகிழ்ந்து வரங்கள் கொடுத்ததும், மேல் யாவரும் தமயந்தியின் நகரிற்கு வழிக்கொண்டதையும் கூறுகின்றன.

—

வானவர்கோ னேவல் வழிச்சென்று வானுதலைத்
தானணுகி மீண்டபடி சாற்றவே—தேன்முரலும்
வண்டார் நளன்போந்து வச்சிராயு தற்றொழுதான்
கண்டா ருவப்பக் கலந்து. 79.

விண்ணவர்த மேவலுடன் வீமன் றிருமகள்பால்
நண்ணு புகழ்நளனு நன்குரைத்த-பெண்ணணங்கின்
வன்மொழியுந் தேவர் மனமகிழத் தான்மொழிந்த
மென்மொழியுஞ் சென்றுரைத்தான் மீண்டு. 80.

அங்கி யமுதநீ ரம்பூ வணியாடை
யெங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே—சங்கையறப்
பெற்றா யெனவருணா னகண் டலன்றருமன்
மற்றொரு மீந்தார் வரம். 81.

அங்கவர்கள் வேண்டும் வரங்கொடுக்கப் பெற்றவர்கள்
தங்களொடுந் தார்வேந்தன் சார்ந்தனன்மேல்-மங்கை
வயமருவு கின்ற மனக்கா வலர்க்குச்
சயம்வரந்தான் கண்டதோர் சார்பு. 82.

இது இவ்வாறாக, இனித் தமயந்தியின் நிலையினைக் கவி வருணிக்க ஆரம்பிக்கின்றார்.

—

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[276-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 1.

ப்ரூட்டஸ்:—இப்பொழுதே பப்லியஸ்ஸிம்பர் விடுதலை அடையுமாறு புரியவேண்டுமென்று நின் கைகளுக்கு முத்தமிடுகின்றேன்; ஆயினும், இச்சகம் நயந் திடுவதன் றிது, ஸீஸர் (1)

ஸீஸர்:—ப்ரூட்டஸ், என்னிது ! (2)

காஸ்ஸியஸ்:—பொறுப்பாய் என்னைஸீஸரே,ஸீஸரே என்னைப்பொறுப்பாய் ! பப்லியஸ்ஸிம்பருக்கு விடுதலை இரந்தனனாய், நின் அடித்தலத்தளவு தாழ்ந்து காஸ்ஸியஸ் வீழ்கின்றான். (3)

ஸீஸர்:—நின்போன் றிருந்தெனனாயின் நானும் நனி அசைவுறலாம். (4) மற்றவரை அசைப்பதற்கு இரந்து முன்னின்று வேண்டுபவன் யானாயின், வேண்டுகோள்கள் என்னை அசைக்கக் கூடும் (5) யானோ, வடமீன் என்ன மாறாஉறுதியேன். விலகுதலின்றித் தன்னிலைதங்கும் தன்மைதன்னில் விசும்படங்கலு மதற்கோர் இணையோ இல்லை. எண்ணரிய பொறிகளால் ஆகாசம் பூசப்பெற்றிருக்கின்றது. அவைகளெல்லாம் அனல்களே ; ஒவ்வொன்றும் ஒளிர்கின்றது ; எனினும், இவைகளனைத்திலும் தன்னிலை விலகாது பற்றிநிற்பது ஒன்றே (6). இப்பூவுலகிலும் அப்படியே மனிதர் நிறைந்து நனி இருக்கின்றனர்; ஊனும் உதிரமுமேயாதலின் மனிதர் அசைதற்குரியவர். எனினும், அசைவுற்றுச் சலிக்காமல், எதிர்ப்பதற்கியலாத்தன்னுடைய தானத்தைத் தனிபற்றி நிற்பவன் இத்தொகுதிள் ஒருவனையே யானறிவேன்; அன்னவனும் நானேதான்.

(1) தனதினும் இனியதாய், ஸீஸரின் செவிகளில் இசைக்கவல்ல குரல் ஒன்று இல்லையோ என்று மெட்டல்லஸ் ஸிம்பர் இயம்பியவுடன், அவன்சார்பு பேசுதற்கு ப்ரூட்டஸ் முன்வருகின்றான். தம்முடைய பணிவினைத் தெரிவிப்பதற்குக் கைகளை முத்தமிடுவது அந்தத் தேயத்தினர் வழக்கம். பப்லியஸ்ஸிம்பர் என்பவன், மெட்டல்லஸ்ஸிம்பரது சகோதரன்; நாடு துரத்தப்பட்டிருப்பவன். “உண்மையில் உன்னை அன்புடன்பணிந்திதுநான்வேண்டுகின்றே னல்லது, உள்ளொன்று வைத்துப் புறமொன்று புரியும் இச்சகம் அன்று இது” என்பது ப்ரூட்டஸின் பொருள்.

(2) “என் னுயிர்நண்பனா யிருக்கும் நீ, எனக்குத் தாழ்ந்தவன்போல் பணியலாமோ!” என்பது கருத்து.

(3) சங்கேதப்படி இப்பொழுது, காஸ்ஸியஸூம் ஸிம்பரின் சார்பு வேண்டத் தலைப்படுகின்றான். “காஸ்ஸியஸாகிய நான் நின் கால்களில் வீழ்ந்து வேண்டுகின்றேன்” என்பது பொருள்.

(4) அசைதல் - இணங்குதல்—தன்னுடைய மனத்திட்பமும் கொள்கையும் தளர்ந்து மற்றவர் ஆட்டிவைத்தபடி ஆடுவது அசைவு எனப்படும். “பொதுமை நீங்கிய திண்மையுடையவன் நான். ஆதலின், உன்னையும் மற்றெல்லாரையும் போல், ஏனையோர் இரப்பதற் கிணங்கி, யான் விதித்த கருமத்தைக் கைநெகிழ்த்தும் தன்மையனல்லேன்.” என்பது பொருள்.

(5) நான் யாதும் ஒருவரைப் பணிந்து வேண்டாதவன் ஆதலின், மற்றவர் என்னைப் பணிந்து வேண்டுவதற்கும் இணங்கமாட்டேன்.

(6) விண்மீன்கள் எல்லாம் ஒரு வண்ணத்தவாய் எண்ணிறந்தன இருக்கின்றன வாயினும், அவைகளில், தன்னிலை மாறுதலின்றி நிற்பது வடமீன் ஒன்றே. அதுபோல் மனிதரிற் பொதுவற ஒருநிலை நிற்பவன் தானே என்கின்றான், ஸீஸர்.

அதனைச் சிறி திதனிலுங் காட்டுவேன் (7). ஸிம்பரை இந்நாட்டினின்று அகற்றுவதில் நிச்சயமாயிருந்தேன்; அவன் அவ்வாறே யிருக்கவேண்டுமென்பதில் நிச்சயமாக இருக்கவும் இருப்பேன்.

ஸின்னா:—ஓ! ஸீஸரே.

ஸீஸர்:—போ! ஒலிம்பஸைத் தூக்குவாயோ, நீ? (8)

டெஸ்ஸியஸ்:—மகாஸீஸரே!

ஸீஸர்:—ப்ரூட்டஸே வீணாகத்தன் முழந்தாளில் வீழ்கின்றானல்லனோ?

காஸ்க்கா:—பேசுக, கைகளே, எனக்கு! (10)

[காஸ்க்கா, ஸீஸரைக் கழுத்தில் குத்துகின்றான். ஸீஸர் அவன் கைகளைப் பற்றிக்கொள்கின்றான். இதன்மேல், சதிகாரர்கள் பலர் ஸீஸரைக் குத்துகின்றனர். கடைசியில் மார்க்கஸ் ப்ரூட்டஸ் குத்துகின்றான்]

ஸீஸர்:-நீயுமா,ப்ரூட்டஸ்!ஆயின், ஸீஸரேவீழ்க.(11)

[ஸீஸர் சாகின்றான். செனட் சபையினர்களும் சனங்களும் திகைப்புற்று அகல்கின்றனர்]

ஸின்னா:—சுதந்தரம்! விடுதலை! கொடுமை மடிந்தது! ஓடுங்கள், விளம்புங்கள், தெருக்களில் இதனைக் கதறுங்கள்.

காஸ்ஸியஸ்:—பொதுமன்றங்களுக்குச் சென்றுசிலர், "சுதந்தரம், விடுதலை, உரிமையின் வருகை" என்று கூவுங்கள் (12).

ப்ரூட்டஸ்:—சனங்களே, செனட் சபையோர்களே, அஞ்சிக் கலங்கவேண்டா; ஓடியலையாதீர்; இருக்குமிடத்திலேயே நில்லுங்கள். பேரவாவின் கடனைத் தீர்த்தாய்விட்டது. (13)

காஸ்க்கா:—ப்ரூட்டஸ், நீ பொதுமன்றம் செல்.

டெஸ்ஸியஸ்:—காஸ்ஸியஸும் போகட்டும்.

ப்ரூட்டஸ்:—பப்லியஸ் எங்குளன்?

ஸின்னா:—இதோ, இக்கலகத்தால் முற்றிலும் குழம்பியுளன்.

மெட்டல்லஸ்:—உறுதியுடன் ஒன்றி நில்லுங்கள். ஸீஸரின் நட்பினன் எவனேனும் நேராவண்ணம்

ப்ரூட்டஸ்:—நில்லென்ற சொல் சொல்லாதே. பப்லியஸ், தளர்வொழிந்து கிளர்ந்திடுக. உனக்கேனும் வேறெந்த உரோமனுக்கேனும் ஒரு தீங்கும் கருதியதில்லை; இதனை நீ அவர்களுக் கெடுத்துச்சொல்.

காஸ்ஸியஸ்:—எம்மீது அடர்ந்துவருஞ் சனங்கள், நின் முதுமைக் கெதுவேனும் இடரியற்றாவண்ணம் பப்லியஸ் நீ எங்களிடைநின்று விலகிவிடு.

ப்ரூட்டஸ்:—அங்ஙனமே செய்; செய்த யாங்களேயன்றி இச்செய்கையின் முடிவிற்கு ஒருவரும் ஆளாகவேண்டா. (14)

[ட்ரெபோனியஸ் மீண்டும் வருகின்றான்]

காஸ்ஸியஸ்:—ஆண்டனி எங்கே?

ட்ரேபோனியஸ்:—திகைப்புற்றுத் தன் வீட்டிற்கோடிவிட்டான். புருடரும் பெண்டிரும் சிறுவரும், ஊழிநாள் வந்துற்றதேபோல் விழித்துக் கதறி அங்குமிங்குமா ஓடுகின்றனர்.

ப்ரூட்டஸ்:—விதியே, நின்சித்தம் யாதென இனித் தெரிந்துகொள்வோம்-நாங்கள் சாகத்தான் வேண்டுமென்பதை அறிந்திருக்கின்றோம். வேளையையும் நாட்களை வளர்த்திருப்பதையுங் கொண்டன்றோ மனிதர் நிற்கின்றனர். (15)

(7) வடமீன் - திருவாசுஷத்திரம். எல்லாம் நக்ஷத்திரங்களேயானாலும், வடமீன் ஒன்றே தன்நிலை மாறாது தனித்து நிற்பதுபோல், எல்லாரும் மனிதர்களாயினும் தானொருவனே ஒன்றற்கு மசையாத் திண்மையுடையவன் என்று ஸீஸர் விளம்புகின்றான். தக்க காரணங்கொண்டு நான் ஸிம்பருக்கு விதித்த தண்டனையை மற்றவர் வேண்டுகோட் கிணங்கி மாற்றமாட்டேன்—இது உறுதி.

(8) ஒலிம்பஸ், என்பது ஒரு பெரிய மலை. யான் குறித்த எண்ணத்தினின்று என்னை மாற்ற முயல்வது ஒரு பெரிய மலையைப் பெயர்த்துத் தூக்கப்புகுவதுபோல், பயனற்ற முயற்சியாகும், என்பது பொருள்.

(9) ப்ரூட்டஸின் வேண்டுகோட்கே இணங்காத நான் உங்கள் சொற்களுக்கோ செவிகொடுப்பேன்.

(10) எங்கள் வாய்ச்சொற்கள் வீணாயின் கைகள்தாம் இனிப் பேசவேண்டும் என்று, சங்கேதப்படி காஸ்க்கா ஸீஸரைத் துண்ணெனக் கழுத்தில் குத்திவிடுகின்றான்.

பப்லியஸ்ஸிம்பருக்காக இவர்கள் காட்டியபரிவும் வேண்டிய இரக்கமும் எல்லாம் பொய்,என்பது வெளிப்படை. ஸீஸரைக் கொல்வதற்கு இதனை ஓர் நிமித்தமாகவே கற்பித்துக் கொண்டனர். உள் இரகசியம் தெரியாதவர்களுக்கு, இந்நிகழ்ச்சி முற்றிலும் மாறாகத் தோன்றும். ப்ரூட்டஸ் காஸ்ஸியஸ் முதலியவர்கள் மிகவும் இரக்கமுடைய நெஞ்சினர்கள் போலவும், ஸீஸர் பப்லியஸ்ஸிம்பருக்கு ஏதோ அநீதி இயற்றிவிட்டது போலவும், நீதி செய்யுமாறு இவர்கள் மிக இரந்து வேண்டியும் ஸீஸர் செவிகொடுத்தலின்றிச் செருக்குற்றிருந்தவன் போலவும் விடயம் தென்பட, ஸீஸரைக் கொன்றது தக்கதே எனக் கருதுவார். இதனில் அநீதியுமில்லை; அதனை நேர்செய்யவேண்டும் என்னும் பரிவு, ப்ரூட்டஸ் காஸ்ஸியஸ் முதலியோர்க்கு இருந்ததுமில்லை. உலகில் நடைபெறும் அரசியற் கபட நாடகங்களனைத்தும் இன்னதேயன்றி உண்மைக்கு அவைகளில் எள்ளளவேனும் இடமில்லை என்பதை ஷேக்ஸ்பியர் இங்கு வற்புறுத்துகின்றார்.

(11) தன் உயிரிற்கு உயிராய நண்பன் என்று ஸீஸர் ப்ரூட்டஸைக் கருதியிருக்க, அவனே தன்னைக் கொல்லத் தலைப்பட்டவுடன் ஸீஸர், இந்தத் துரோகம் இயல்வதாயின் இனித் தன்னைக் காத்துக்கொண்டுதான் என்ன பயன் என்பான்போல் கையற்று, "நீயுமா, ப்ரூட்டஸ், ஆயின் ஸீஸரே, வீழ்க" என எதிர்த்தலின்றிச் சாய்ந்து விட்ட இது மிகவும் உருக்கமான காட்சியாம்.

(12) சுதந்தரம் விடுதலை முதலிய உரிமைகளைப் பறைசாற்றிச் சாதித்துவைப்பவர்தம் தன்மையும் செய்கையும் என்றென்றும் இன்னதே என்பதைஷேக்ஸ்பியர், சரித்திரவாயிலாய்த் தெரியக் காட்டுகின்றார்.

(13) தான் கொண்டிருந்த பேராசைக் கெல்லாம் ஸீஸர் தன் உயிரையே கொடுத்து ஈடுசெய்துவிட்டான்—என்பது பொருள். ஸீஸரின் பேராசையும் வெறும் கற்பனையே. இவ்வாசையால் ஸீஸர் எவ்வித அநியாயமும் செய்ததில்லை என்று ப்ரூட்டஸே முன்னர் ஒப்புக்கொண்டிருக்கின்றான்.

(14) ஸீஸரைக் கொல்வதற்குமுன் இருந்த ஊக்கம் பின்னர் இல்லை. இந்தப் படுகொலையின் பழியினால் தனக்குக் கேடுவருவதே நிச்சயம் என்று ப்ரூட்டஸிற்கு உடனே தோன்றத் தலைப்படுகின்றது.

(15) பழிபட்ட நெஞ்சில் ஊக்கம் செழிப்பதில்லை. ஸீஸரைக் குத்தி வீழ்த்திய நிமிடம்முதல் ப்ரூட்டஸின் மனதில் மரணபயம் குடிகொண்டுவிட்டது. தான் செய்ததைச் செய்துவிட்டுப் பிறகு "என்னால் ஆவது என்; எல்லாம் விதியின் செயல்" என்பான்போல் தன் பொறுப்பைத் தவிர்க்கமுயல்கின்றான். அதன்பின், "மரணத்திற்கு விஞ்சிய தண்டனையில்லை. அம்மரணத்திற்குத்தான் அஞ்சுவானேன். ஒரு நாளல்லாக்கால் ஒருநாள் எல்லோரும் சாகத்தானே வேண்டும். என்றைக்குத் தம் காலம் முடிவடையுமென்பது தெரியாதவராய், அன்றன்று தப்பினால் அத்துணையும் இலாபம், என்ற பான்மையிற்றானே மனிதர் தம் வாழ்நாளை நடத்தவேண்டியவர்களா யிருக்கின்றனர்" என்றின்னவாறெல்லாம் எண்ணித்தன்னையே தேற்றிக்கொள்ள முயல்கின்றான் ப்ரூட்டஸ்.

காஸ்ஸியஸ்:—ஆம். தன் ஆயுளில் ஆண்டோரிருபது குறைத்தவனொருவன், சாவிற்கஞ்சுகின்ற அத்தனை ஆண்டுகள் குறைத்தவனாவான். (16)

ப்ரூட்டஸ்:—இதற்கொவ்வினால், பின் இறப்பதும் ஒரு இலாபமே; ஆதலின் இறப்பதற் கஞ்சுகின்ற அவன் ஆண்டுளில் இருபது குறைத்துவிட்ட நாம் ஸீஸருக்கு உற்ற நண்பர்களே (17). குனியுங்கள் உரோமர்களே, குனிந்து, ஸீஸரின் இரத்தத்தில் முழங்கையளவு நம் கரங்களைத் தோய்த்துக் கத்திகளிலும் பூசுவோம். பிறகு கடைத்தெரு மருங்கு நடந்தேகி, படைக்கலன்களை நம் தலைமிசைச் சுழற்றினர்களாய், "அமைதி! விடுதலை! சுதந்திரம்!" என்று கூவுவோம். (18)

காஸ்ஸியஸ்:—அப்படியே, குனிந்து கழுவுங்கள்—இன்னும் பிறந்திரா நாடுகளிலும் அறிந்திராமொழிகளிலும், எத்துணைக் காலங்களுக்கப்பால், உயரிய இக்காட்சி மீண்டும் நடிக்கப்பெறுமோ! (19)

ப்ரூட்டஸ்:—புழுதியிலும் பெரியதொரு மதிப்பின்றி இப்பொழுது பாம்பேயின்பீடமிசை நெடிது கிடக்கின்ற ஸீஸர் எத்துணைமுறை விளையாட்டிற்கு இரத்தம் வடிப்பானோ! (20)

காஸ்ஸியஸ்:—எத்துணைமுறை அது நிகழ்கின்றதோ அத்துணைமுறை நம் கூட்டத்தினர், தம் நாட்டிற்கு விடுதலை யளித்தவர்களென்று அழைக்கப்படுவார். (21)

டெஸ்ஸியன்:—என்ன! புறப்படலாமோ நாம்.

காஸ்ஸியஸ்:—எல்லோரும் ஏகுக. ப்ரூட்டஸ் நம்மை நடத்தட்டும்:. உரோமிற் சிறப்பும் வீரமும் வாய்ந்த இதயங்களுடன் நாமவனைப் பின்தொடர்ந்து செல்வோம்.

(16) காஸ்ஸியஸும் அவ்வாறே கலக்கமெய்திப் பின் ப்ரூட்டஸின் கொள்கைக் கிணங்கி உளம்தேற முயல்கின்றான். "என்று வருமோ மரணம் என்று அஞ்சியஞ்சி ஒவ்வொருநாளும் கடத்துவதற்குப் பதிலாக, உடனே கொன்றுகொண்டுவிடுவதுதான் உத்தமம். இருபது வருடங்களுக்குப் பின் சாவதைவிட முன்னேயே செத்தால், அத்தனை வருடங்கள் அநுபவிக்க வேண்டிய அச்சத்தினின்று தப்பினவ ராவோ மன்றோ!—என்பது கருத்து.

(17) இதன்படி, ஸீஸரைக் கொன்றதால் அவனுக்குச் செய்த உபகாரம் மிகப் பெரிதெனக் கருதவேண்டுமென்று தன்னுடைய கொள்கையைத் தானே பரிகசிக்கின்றான் ப்ரூட்டஸ்.

(18) அமைதி என்ற பெயரால் செய்கின்ற அழிவுகளும், "விடுதலை, சுதந்திரம்" என்றுமுழங்கிவருவார் சரித்திரங்களும் இன்னவாறிருக்குமென்பதை ஷேக்ஸ்பியர் நன்கு புலப்படுத்துகின்றார்.

(19) உலக சரித்திரத்தில் பற்பல இடங்களில் இனி வருங் காலங்களில், இப்படியே, விடுதலை சுதந்தரம் முதலிய பேரொலிகளின் பெயரினால், ஒருவனைக் கொன்று அவனுடைய இரத்தத்தில் சிலர் கைகளைத் தோய்த்துத் திரிய வேண்டி நேரிடும்—என்று காஸ்ஸியஸ் உரைக்கின்றான்.

(20) "உயரிய காட்சி நடிக்கப்பெறுமோ" என்று காஸ்ஸியஸ் இயம்பிய சொற்களை உட்கொண்டு ப்ரூட்டஸ் எதிருரைத்த வாசகம் இது. காட்சிக்கு உயர்ந்ததா யிருக்கலாமெனினும், கைகூடும் காரியமோ ஒன்றுமில்லை. மேலும் நாம் கபடநாடகங்கள் நடிக்கின்றோமே யன்றி உண்மையாய உணர்வினால் இயங்குபவரல்லோம். ஸீஸரும், இவன் போன்று இனி வீழ்கின்றவர்களும், வடிக்கின்ற இரத்தங்களெல்லாம் வீண்விளையாட்டாய் முடிவதன்றி விடுதலை முதலியவைகளை அடைவதென்னும் நோக்கமேனும் பயனேனும் விளைவதென்பது எங்கும் நேர்ந்திடாது என்பது பொருள்.

(21) நோக்கம் இல்லாமற் போயினும் என், விடுதலை வாய்க்காதொழியினும் என்! இத்தகைய கொடுமைகளைச் செய்பவர்களை, எக்காலத்திலும் எவ்விடத்திலும் சனங்கள், "விடுதலைக்குப் பாடுபட்ட வீரர்கள்" என்று மிகவும் பாராட்டிக் கொண்டாடுவார்கள் என்பதில் ஐயமில்லை, என்கின்றான் காஸ்ஸியஸ்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—5. சூர்ப்பணகைப் படலம்.

[277-வது பக்கத் தொடர்ச்சி]

அழகினுக் குடைபவ ளரக்கி யேயலள்.

தன்கிளைக் கிறுதிகாட்டுவாள் தொடங்கிய அவ்வரக்கி சூர்ப்பணகை இராமனது அவயவ அழகினைக் கண்டினும் முடியவில்லை. அவன் நின்றநிலத்தை நோக்குகின்றாள்; நோக்கி,

உடுத்தநீ ராடைய ளுருவச் செவ்வியள்
பிடித்தரு நடையினள் பெண்மை நன்றிவ
னடித்தலந் தீண்டலி னவனிக் கம்மயிர்
பொடித்தன நிர்க்கருமாற் புல்லென் றன்னுவாள்

[கடலை ஆடையாக உடுத்தவளும், திரண்ட உருவத்தின் அழகுடையவளும், பெண் யானை போன்ற நடையை உடையவளுமாகிய பூமிதேவி பெண்ணாய்ப் பிறந்ததால் பெற்ற பாக்கியம் சிறந்ததே. இங்கு முளைத்திருக்கும் புற்கள், இவன் திருவடிகள் படுதலால் உவகை மிகுந்து பூமிதேவிக்கு அழகிய உரோமராசிகள் சிலிர்த்தனவற்றை ஒக்கும், என்று எண்ணுவாள்]

பின் விசும்பினைப் பார்க்கின்றாள். அங்கியங்கும் கதிரவன் இவள் கண்களிற்படுதலும்,

வாணிலை மருங்குலான் வயங்கு சோதியைக்
காணல னேகொலோ கதிரி னயகன்
சேணெலாம் புல்லொளி செலுத்திச் சிந்தையி
னாணலன் மீமிசை நடக்கின் றானென்றாள்

[உடைவாள் தங்கிய இடையையுடைய இவனது விளங்குகின்ற காந்தியைச் சூரியன் பார்த்ததில்லையோ; ஆதலால், மனத்தில் வெட்கமின்றி நெடுந்தூரம் தன் அற்ப ஒளியைச் செலுத்திக்கொண்டு ஆகாயத்தில் நடக்கின்றான்—என்றாள்.]

இன்னதோர் தன்மை வாய்ந்த இச்செம்மல் வற்கலையுடுத்துச் சடைமுடித்து வனத்துறைவதோ என்று ஏங்கிய காரணத்தால்,

நற்கலை மதியுற வயங்கு நம்பித
னற்கலை திருவரை யெய்தி யேமுற
வற்கலை நோற்றன மாசி லாமணிப்
பொற்கலை நோற்றில போலு மாலென்றாள்.

[நல்ல கலைகள் நிரம்பிய சந்திரன்போல விளங்கும் இவ்வாண்மகனது, சூரியனும் ஒளி மழுங்கும்படி பிரகாசிக்கின்ற அழகிய இடையை அடைந்து களிப்படைவதற்கு மரவுரி ஆடையே தவஞ்செய்திருக்க, அத்தகைய தவத்தை, குற்றமற்ற அழகிய பீதாம்பரங்கள் செய்ததில்லையோ, என்றும்]

தொடையமை நெடுமழைத் தொங்க லாமெனக்
கடைகுழன் றிடைநெறி கரிய குஞ்சியைச்
சடையெனப் புனைந்தில னென்னிற் றையலா
ருடையுயிர் யாவையு முடையு மாலென்றாள்.

[ஒழுங்காகத் தொடர்ந்த மேகங்கள் தொங்கப்பெற்ற வரிசையைப்போல, நுனிசுருண்டு இடைநெறித்துக் கரியதாக உள்ள தன் தலைமயிரைச் சடையாகத் தரித்திரானாயின், இவ்வுலகில் பெண்கள் என்றிருப்பவர்தம் உயிர்களெல்லாம் அழியும், என்றும்]

நாறிய நகையணி நல்ல புல்லிறை
லேறிய செவ்வியி னியற்று மோவெனு
மாறகன் முழுமணிக் காசின் மாட்சிதான்
வேறொரு மணியினல் விளங்கு மோவென்பாள்

[விளங்குகின்ற ஒளியுடைய நல்ல ஆபரணங்கள் இவன் திருமேனியைச் சேர்ந்தால், அவைதாம் இவனுக்கு இப்பொழுதிருப்பதனினும் அதிக அழகைச் செய்யக் கூடுமோ, என்று அயிர்த்துப் பிறகு, ஒப்பில்லாத, இரத்தினங்களுக்கெல்லாம் அரசாகிய கவுஸ்துப இரத்தினத்தின் அழகுதான், வேறோர் இரத்தினத்தை அதன்மீது அணிவதால் அதிகமாகப் பிரகாசிக்குமோ, என்றும்]

காந்தில னிலக்கண மெடுத்துக் காட்டிய
பரந்தரு நான்முகன் பழிப்புற் றானரோ
விரந்திவ னிணையடிப் பொடியு மேற்கலாப்
புரந்தர னுலகெலாம் புரக்கின் றானென்றாள்

[இவன் இணையடிகளினின்று உதிர்கின்ற தூளியையும் இரந்து ஏற்கும் தகுதியில்லாத இந்திரன் எல்லா உலகங்களையும் ஆள்வானுக—சாமுத்திரிகா இலக்ஷணங்களில் யாதும் உலோபமின்றி இவனுடைய வடிவத்தில் எடுத்துக் காட்டிய மேன்மை பொருந்திய பிரமதேவன், இவனைக் காட்டில் திரியும்படி விட்டுவிட்டதால், மிக்க பழிக்குப் பாத்திர மாகின்றான், என்றும்]

திறம்படப் பற்பல அமைதி தேர்கின்று ளாயினள். இராமனது ஒவ்வோர் அங்கமும் இவள் உள்ளமத்தனையும் அங்ஙனே கொள்ளைகொள்ள என் செய்வாள். இப்பெருமகன் எய்திய நல்குரவால் நான்முகன் பழிப்புற்றானன்றி இவனுக்கோர் இழிவு வந்தடைந்ததில்லை. பொற்கலை நோற்றிலது; முழுமணி பூணுக்கோர் பூண்வேண்டா; என்ன இன்னபல எண்ணி உள்ளம் தேறுகின்றனள். குஞ்சிமைச்சடையென முடித்தனன் என்னின், அது மடவார்பால் வைத்த பரிவிற் கியன்றதே.

சழக்கியேனும் என், சந்திரனொளியினைக் குழைத்துச் செய்ததே யனையவோர் மெல்லியல் வனிதையேனும் என்! இப் பேரழகின்முன் எந்தப் பெண்மைதான் எதிர்த்து நிற்கும். தன்னையோர் தலைவியாய்ப் பாவித்துப் பரிவுகூர்ந்து பாடிய பிள்ளைபெருமாள் ஐயங்கார்,

வாராக வாமன னேயரங் காவட்ட நேமிவல
வாராக வாவுன் வடிவுகண் டால்மன் மதனுமட
வாராக வாதரஞ் செய்வனென் றாலுய்யும் வண்ண [மெங்கே
வாராகவாச முலையேனைப் போலுள்ள மாதருக்கே

[வராகாவதாரம் எடுத்தவனே, வாமனனாகத் தோன்றியவனே, திருவரங்காதனே, வட்டமான உருளைகளுடன் கூடிய தேரிற்குக் கிருஷ்ணாவதாரத்தில் சாரதியாக அமைந்தவனே, இராகவா, உன் வடிவழகைக் கண்டுவிட்டால், உன்னுடன் கலந்து இன்புற வேண்டி மன்மதனும் தானோர் பெண்ணாக ஆசைப்படுவான் என்றால், மார்பில் கச்சுத்தங்கிய முலையையுடைய என்போன்ற பெண்கள் பிழைத்திருக்கும் வகைதான் உளதோ]

என ஏங்குவாரெனின், வல்லரக்கியேயேனும் பெண்ணென்ற பான்மைபால் சூர்ப்பணகை என்படாள். இவளும் ஒருவாறு தன் கற்பைக் காக்க முயன்றனள். எனினும் அனலிற் கயலிருந்த மெழுகு என் செயும். ஆதலின்,

நீத்தமும் பரவையுங் குறுக நெஞ்சிடைக்
கோத்தவன் புணர்விடைக் குளிப்ப மீக்கொள
வேத்தவம் புரிபவொன் றீகலான் பொருள்
காத்தவன் புகழெனத் தேயுங் கற்பினள்

[வெள்ளமுங் கடலும் சிறியதென்னும்படி தன் மனத்திடை தொடுத்த காமம், உணர்வு அமிழ்ந்து ஒழியும்வண்ணம் அதிகரிக்க, அதனால், சிறப்பித்துக் கூறப்படும் நற்கருமங்களைச் செய்வதற்குதவியாய் ஒன்றையுங் கொடுக்காமல் தன் கைப்பொருளை வைத்துக்கொள்கின்ற உலோபியின் புகழைப்போல் வரவரக் குறையும் கற்பினள் ஆயினள்]

ஆகி,

வான்றனில் வரைந்ததோர் மாத ரோவியம்
போன்றனள் புலர்ந்தனள் புழுங்கு நெஞ்சினள்
தோன்றல சுடர்மணித் தோளி னுட்டங்க
ளூன்றினள் பறிக்கவோ ராற்றம் பெற்றிலள்

[ஆகாயத்தில் எழுதிய ஓர் பெண்படத்தை ஒத்துத் திகைத்துநின்று, வாட்டமெய்தி, காமத்தால் புழுங்கிய மனமுடையவளாய், இராமபிரானது ஒளிபொருந்திய அழகிய தோள்களில் தன் கண்களைத் தைக்கவிட்டுப் பிறகு அவைகளைப் பறித்துக்கொள்ளும் வலிமையும் முயற்சியும் அற்றவளாயினள்]

கண்கள்தாம் தன்வயின் மீளாவெனின், மற்றக் கண்கள் தைத்தவிடம் தான்சென்று சேர்வதே இயல்வதாகின்றது.

நின்றன ளிருந்தவ னெடிய மார்பக
மொன்றுவெ னன்றெனி னமுத முண்கினும்
பொன்றுவென் போக்கினி யரிது போன்மெனுச்
சென்றெதிர் நிற்பதோர் செய்கை தேடுவாள்

[இவ்வாறு நின்றிருந்த சூர்ப்பணகை, "பெருந் தவக் கோலங்கொண்ட இவன் மார்பினைச்சேர்த்து தழுவுவேன், அது நேர்ந்திடாதாயின், இதன்முன், சாகாமருந்தாகிய தேவாமிருதத்தையே யான் உண்டிருப்பேனாயினும் அதனாலும் காக்கமாட்டாது சாவேன். இவன்முன் போய் எதிர்நிற்பது எனக்கு அரிதோ" என்றெண்ணி அவனுக்கு எதிர் சென்று நிற்பதற்குரியதோர் வகையைத் தேடுவாள் ஆயினள்]

உண்மையில் உபாயந் தேடியது சூர்ப்பணகையல்லள்—கம்பரே. சரிந்தவயிறும் கூகைக்கண்களும் சிவந்த மயிரும், மூத்துத்தளர்ந்த யாக்கையும், கோரப்பற்களும் இடித்தகுரலும், காணக்கண் கைக்கும் உருவமும் உடையளாய் இச்சழக்கியைக் கொண்டுபோய் இராமன்முன் நிறுத்திக் காதல் புரியவைக்கின்றார் அவ் வான்மீகமுனிவர். இத்தகைய ஒருத்தியின் காதலைக் கைவிதிர்த்தோட்டிய இராகவனுக்கு யாதும் பெருமை பேசுதற் கில்லாமையுடன், இன்ன உருவுடன் சென்று இராமனை வரிக்கலாம் என நினைத்த இவள் மதியும் மிகவும் இகழ்தற் குரியதாகின்றது. ஆதலின், தன் முதனூல் பின்னுகித் தான் முன்னேக வேண்டுவதன் அமைதியைக் கம்பர் தேடுவாராகி,

எயிறுடை யரக்கியெவ் வுயிரு மிட்டதோர்
வயிறுடை யாளென மறுக்கு மாதலாற்
குயிலொடர் குதலையோர் கொவ்வைச் செவ்விவாய்
மயிலொடு ரியலியாய் மருவ னன்றெனு

[கோரப்பற்களையுடைய இந்த அரக்கி எல்லா உயிர்களையும் தின்று நிறைந்த வயிற்றை உடையவள் என்று இவன் தன்னை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்துவிடுவான்; ஆதலால், குயில் போன்ற மழலைச்சொற்களையும், கொவ்வைக் கனிபோன்ற அழகிய வாயையும் உடையவோர் மயில்போன்ற சாயலுடைய மங்கையாய் நெருங்குவதே நல்லதென்று எண்ணி-]

பங்கயச் செல்வியை மனத்துப் பாவியா
வங்கையி னுயமந் திரத்தை யாய்ந்தனள்
திங்களிற் சிறந்தொளி முகத்தள் செவ்வியள்
பொங்கொளி விசும்பினிற் பொலியத் தோன்றினள்

[தாமரைமலரிலுள்ள இலக்குமியைத் தன் மனத்தில் தியானித்து, தன் அகங்கையில் பொருந்திய மந்திரத்தை ஜபித்து, அதனால், சந்திரனிலும் அதிகமாய் விளங்குகின்ற முகமுடைய அழகியாய், தன் மேனியின் ஒளி ஆகாயத்தில் விளங்க, வந்து தோன்றினள்]

வல்லரக்கி மெல்லியலாய் வந்தவாறிது. உருவத்தால் மாத்திரமன்றி உரைசெய்து காதலை உணர்த்தும் வகையாலும் சூர்ப்பணகை கம்பர் நூலினுள் மிக்கதோர் மென்மை யெய்துகின்றாள்.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன்முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை சென்னை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.
"நஞ்சன்கூடுபல்பொடி" சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது)
பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்

ஏமாங்கத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.

கலா நிலயம். வேளாளர் வீதி. புரைசைவாக்கம். சென்னை. விலை ரூ. 1—4—0

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்திபாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N தணிகாசல முதலியார், B. A. B. L) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுறைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அலலது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கடடணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயீ, தென்னுப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

மேஹர் பாபா:—"மதபேதங்களை ஒழிக்க ஐரோப்பாவில் ஒரு புதிய போராட்டம் இவ்வருஷத்தில்ஆரம்பிக்கப்படும். புதிய மதமானது பிரேமை அதாவது அன்பைப் போதிக்கும்" என்ற ஸ்ரீ ஸத்குரு மேஹர் பாபா சென்றவாரத்தில் பம்பாயில் அஸோஸியேடெட் பிரஸ் பிரதிநிதியிடம் தெரிவித்தார். அவர் இப்பொழுது லண்டனுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறார். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் அவர் சில ஆசிரமங்களை ஸ்தாபித்திருக்கிறார். அநேகர் அவருடைய சிஷ்யர்களாக இருக்கிறார்கள். இதுவரையில் அவர் பிரஸித்திபெற இஷ்டப்படாமல் விலகியே யிருந்திருக்கிறார். முதல்முதல்'அஸோஸியேடட் பிரஸ்' பிரதிநிதிக்குத்தான் அவர் பேட்டிகொடுத்துப் பேசினார்.

தாம் கடவுளும் மனிதனு மென்றும், தாம் துரியாதீத நிலைமையில் கடவுளுடன் கலந்து அவருடைய சங்கற்பத்தை நிறைவேற்றுகிறதற்காக ஜகத்திற்குத் திரும்பி வந்திருப்பதாகவும், பல வருஷகாலம் தாம் தம்மைப் பக்குவப் படுத்திக்கொள்ளச் செலவிட்டதாகவும், 7 வருஷங்களாக அனுஷ்டித்துவந்திருக்கிற மௌனவிரதத்தை இப்பொழுது முடித்துக்கொண்டு இனிமேல் பேசப்போவதாகவும் அவர் அறிவித்தார்.

தாம் ஸாதாரண வாழ்வைத் துறந்துவிட்ட பிறகு ஆறுமாதகாலம் துரியநிலைமையில் இருந்ததாகவும், அப்பொழுதுதான் தமக்கு ஞானோதயம் ஏற்பட்டதென்றும், சாதாரண மனிதர்கள், ஜாக்ர சொப்ன சுஷுப்தி அவஸ்தைகளுக்கு உட்பட்டவர்கள் என்றும், மேல்போனவர்கள் துரீயம் என்ற நான்காவது அவஸ்தையை அனுபவிக்கின்றார்கள் என்றும், அப்பொழுது அவர்களுக்கு லோகப்பிரக்ஞையும் அந்தர்யாமியின் பிரக்ஞையு மிருக்கு மென்றும், அதிலிருந்து துரியாதீத நிலைமையை அடைவர் என்றும், அதில் அந்தர்யாமியப் பிரக்ஞை மாத்திரம் இருக்கு மென்றும் அவர் அறிவித்தார். இந்த அவஸ்தையில் தான் ஜீவாத்மா தான் அகண்டமான பரவஸ்து என்று உணர்கிறதென்றும் அவர் பல விஷயங்களைத் தெரிவித்தார்.

அவர் கடவுளா என்று கேட்டதற்குத் தாம் கடவுளும் மனிதனுமென்று அவர் சொன்னார்.

துரியாதீத நிலைமை என்னவென்று கேட்டதற்கு அவர் "அது ஒரு அகண்டமான ஞானம், இந்திரியங்கள் பரஞானத்தில் லயப்பட்டு விடுகின்றன. இயேசு கிறிஸ்துபோல் அவதாரம் செய்தவர்கள் அப்படிப்பட்ட ஞானத்தை உடையவர்கள். அவர்களுடைய ஞானம் சாதாரண ஞானமல்ல," என்று அவர் சொன்னார்.

"நட்சத்திரங்களுக்கு அப்பால்என்ன இருக்கிறது" என்று கேட்டதற்கு அவர் "ஆகாசந்தான் இருக்கிறது. அந்த ஆகாசத்தில் சக்தி இருக்கிறது. அதற்கப்பால் இருட்டு இருக்கிறது. அந்த இருட்டில் தான் ஜோதி இருக்கிறது" என்று அவர் அறிவித்தார். "அது உனக்குள்ளு மிருக்கிறது. அந்த அகண்டமான வாழ்வில் நீ கலந்துவிடின், நீயும் அதை அனுபவிக்கலாம்" என்று அவர் தெரிவித்தார்.

அவருடைய சுற்றுப்பிரயாணத்தைப்பற்றிக் கேட்டதற்கு, தாம்போகப்போகிற இடங்கள் தாம் செய்ய வேண்டிய வேலையைப் பொறுத்ததென்றும், லண்டனில் ஒருமாதத்திற்குமேல் இருக்கப்போகிறதில்லையென்றும் நியூயார்க்கில் எட்டுமாதங்களுக்குக் குறையாம லிருக்கப்போவதாகவும், தாம் ஏழு வருஷங்களாக அநுஷ்டித்துவரும் மௌனவிரதத்தை முடித்து இனிமேல் பேசப்போகிறதாகவும் அறிவித்தார்.

"அவர் ஒரு கோயில் கட்டப் போகிறாரா" என்று கேட்டதற்கு "கோயிலில்லை, ஒரு ஆச்சிரமத்தை ஏற்படுத்தப் போகிறேன்" என்று சொன்னார். "இ[illegible] கிற மதங்களுக்குப் புத்துயிர் கொடுக்கப் போகிறேன். புதியதோர் மதத்தை ஏற்படுத்தப் போகிறதில்லை" என்றார். "கடவுள் தம்முடைய சங்கல்பத்தை நிறைவேற்ற உங்களை நியமித் திருக்கிறாரா' என்று கேட்டதற்கு, "எனக்குச் சிலர் வழிகாட்டுகிறார்கள்" என்று பிடிகொடாமல் பதில் சொன்னார்.

"நான் பேசும்போது எல்லோருக்கும் புரியும்படி சொல்வேன். காந்தியிடத்தில் அப்படித்தான் சொன்னேன். நான் பேசிக் கேட்க அவர் ஆசைப்படுகிறதாகச் சொன்னார். கடைசியாக நான் அவரைப் பம்பாயில் கண்டபோது அவருடைய ராஜீய வேலை முடிந்ததும் என்னுடன் அமெரிக்காவுக்கு வருவதாகச் சொன்னார்" என்று மேஹர் பாபா அறிவித்தார். அவருடைய ராஜீய வேலை எப்பொழுதும் முடியும், என்று கேட்டதற்கு 'ஒரு வருஷத்தில்' எனப் பதிற் சொன்னார்.

கையில் ஒரு அட்டையை மேஹர் பாபா வைத்துக்கொண்டிருக்கிறார். அதில்இங்கிலீஷ் இருபத்தாறு எழுத்துக்களும் எழுதப்பட்டிருக்கின்றன. தாம் பதில் சொல்லும்போது ஒவ்வொரு எழுத்தாகக் காட்டுகின்றார்.

"லோகோபகாரி"

***

கண்ணழகி:—பிரான்ஸ்தேசத்தில் அளவற்ற அழகைக் கொண்டே மிஸ் ஜீலன் காலன் என்னும் ஒரு பெண்ணழகி மிகப் பிரசித்திபெற்றவளா யிருந்ததினால், இவள் பாரிஸிலுள்ள ஒரு நாடக மேடையில் சமயாசமயங்களில் நடிப்பது முண்டு. நடிக்கும் சமயத்தில் 2 மணி நேரம் ஒற்றைக் காலின் மீது நின்றுகொண்டே கண்ணிமை மூடாது இருக்கின்றனளாம். கருப்புவிழி புரளுவதே யில்லையாம். இவளை இத்தோற்றத்தில் கண்டவுடனே மக்களெல்லாம் தாமே மயங்கி வீழ்கின்றனராம். இதன் பயனாய் இவள் மிகக் கீர்த்தி யடைந்து விட்டாள். அநேக பெண்கள் இவளுடைய கண்களில் ஏதாயினுமொரு பின்னத்தை உண்டுபண்ணிவிடவேண்டுமென்று எண்ணியிருக்கின்றனர். இதற்கு அஞ்சி மிஸ். ஜீலன்காலன் தன் 2 கண்களையும் 3 லக்ஷ ரூபாய்க்கு இன்ஷியூர் செய்து கொண்டிருக்கிறாள். "ஆக்டிரஸ்" களுடைய கண்கள் 3 லக்ஷம் ரூபாய்க்குத்தான் இன்ஷியூர் செய்யப்படவேண்டு மென்பது சட்டம். ஒவ்வொரு நாடகத்துக்குப் பிறகும் இவள் தன் கண்களைப் பலவிதமான திரவபதார்த்தங்களைக் கொண்டுகழுவிக்கொள்ளுகின்றாளாம். அன்றியும் ஒரு சிறிதும் இவள் கண்கள் கெடாமலிருக்க வேண்டி ஒரு மெடிகல் போர்டு தினமும் இவள் கண்களைப் பரிசோதனை செய்து வருகிறதாம்.

லோகோபகாரி

***

யந்திரசகாயம்:—இங்கிலாந்தில் ஒரு பெரிய தந்தி ஆபீசில் ஒரு மின்சாரக் காவல்காரனை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இக் காவல்காரன் தந்திஆபீசில் வேலை பார்க்கும் 200 பெண்களைக் கண்காணிக்கின்றான். இப்பெண்கள் வேலை செய்யாமல் சும்மாவிருந்தார்களேயானால் உடனே அந்தக் காவல்காரன் மேலதிகாரிகளுக்கு மணி யடித்துத் தெரிவித்துவிடுகிறான். அன்றியும், காரியாலயத்துள் எவரேனும் ஜன்னல்வழியாக எட்டிப் பார்ப்பார்களே யானால் உடனே இந்தக் காவல்காரன் மணியடித்துத் தெரிவித்துவிடுகிறான்.

மின்சார இயந்திரங்களைக் கொண்டே டைப் அடிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். டைப் அடிக்க மனிதர்களை ஏற்பாடு செய்திருந்தால் அவர்கள் கைகள் தளர்ந்துவிடுவது சகஜம். அன்றி, அவர்கள் சாப்பிடுவதற்குச் செல்லவேண்டியிருக்கும் நேரம் இதனால் வீணாகி விடும். ஆனால் மின்சார டைப் அடிக்கும் இயந்திரங்கள் எந்த நிமிஷமும் நிறுத்தாமல் [illegible] வேலை செய்துகொண்டிருக்கும் [illegible]யில் காட்டிவருகின்றார்கள்.

188965

7-வது வருடம் ! 7-வது வருடம் !!

அமிர்தகுணபோதினி

இது ஒரு நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஒரே ரூபாய் சந்தாவில் 64 பக்கங்கள்.

எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு இதன் பத்திராசிரியர்

நீங்கள் "அமிர்தகுணபோதினி"யைப் பார்த்திருக்கிறீர்களா ?

இதுபோன்ற நவீன மாதாந்திர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாதஸஞ்சிகைகளையொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. பொதுநலப் பத்திரிகையாயும், பிரசித்த விகடப் பத்திரிகையாகவும் விளங்குகின்றது. எல்லாம் கருத்து, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்திபோதனைகளே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசன மழை. 64 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். பார்ப்பதற்கும் அழகு, படிப்பதற்கும் இனிமை, நினைக்க நினைக்க மனோகரமே. இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும் கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. வருடசந்தா ரூ 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-8-0.

மாதிரி காபி வெளிநாடுகளுக்கு இனாம்.

புரொப்ரைட்டர்

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ்,
நெ. 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கபபட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., .L.T.,
இயற்றிய

:: இராமாயண விஞ விடை ::

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு 380 பக்கங்கள் கொண்டது. ஏழு காண்டங்களும், அரிய நீதிகளும், தெளிவுவாய்ந்த அநுபந்தங்களும் அடங்கியது. விலை ரூபா 1 8 0.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்

:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச்செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4

ஆரோக்கிய கிரந்தம் இனாம் !

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம்
வி. விச்வநாத பிள்ளை இயற்றியது
676 பக்கங்கள் கொண்டது.
ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)